02 - 96

# Saturday மெயில்

සැටඩේ මේල්

*A Fascinating Weekly Bulletin*

13-08-2011
பக்கங்கள்: 24
விலை: 15/=



# உலகில் மிகவும் நாகரிகமான பெண்

அடுத்த பக்கம் புரட்டுங்கள்

Registered as a Newspaper at G.P.O.

# உலகில் மிக நீளமான ஸ்கூட்டர்



ஸ்கூட்டரில் எத்தனை பேர் போகலாம் என்றவுடன் இரண்டு அல்லது அதிகபட்சம் மூன்று பேர் என்பதுதான் நம் பதிலாக இருக்கும்.ஆனால் லண்டனைச் சேர்ந்த குழாய் பொருத்துநர் ஒருவர் உலகின் மிக நீளமான ஸ்கூட்டரை வடிவமைத்து அதில் 23 பேரை அமர வைத்து ஓட்டிக் காட்டி அசத்தியுள்ளார்.

72 அடி நீளம் கொண்ட உலகின் மிக நீளமான இந்த ஸ்கூட்டரை அவர் கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற வேண்டும் என்பதற்காக உருவாக்கி அதை ஒரு கி.மீ.தூரம் ஓட்டிக்காட்டி அவர் சாதனை புரிந்துள்ளார்.

லண்டன் லிங்கன்ஷையர் பகுதியைச் சேர்ந்தவர் கோலின்.குழாய்கள் பொருத்தும் வேலை பார்த்து வரும் இவருக்கு சிறு வயதிலிருந்தே எதையாவது சாதித்துக் காட்ட வேண்டும் என்ற உணர்வுத் தீ உள்ளுக்குள் கொழுந்துவிட்டு எரிந்து கொண்டிருந்தது.

அவருக்குள் பற்றி எரிந்த உணர்வுத் தீக்குத் தீனி போடும் விதமாக ஒரு புது ஐடியா கிடைத்தது.அதாவது தனக்குத் தெரிந்த தொழிலை வைத்து உலகின் மிக நீளமான ஸ்கூட்டரை உருவாக்கி சாதனை படைக்க முடிவு செய்தார்.

இதற்காக தனது 125 சி.சி.ஸ்கூட்டரின் பின்பக்கத்தை பாதி அளவுக்கு வெட்டி எடுத்து 72 அடி நீளம் கொண்ட அலுமினிய செஸியுடன் இணைத்தார். பிறகென்ன அவரது அயராத உழைப்பின் மூலம் உலகின் மிக நீளமான ஸ்கூட்டர் ரெடி.

ஆனால் அதை ஓட்டிக்காட்டினால் தான் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற முடியும்.ஸ்கூட்டர் என்பதையும் ஒத்துக் கொள்வார்கள்.

எனவே தனது நீளமான...ஸ்கூட்டரை 100 மீற்றர் தூரம் ஓட்டி சாதனை படைக்க முடிவு செய்தார்.இதற்காக பலரை அணுகியபோது பலர் தயங்கினர்.கீழே விழுந்துவிடுவோம் என்ற பயம்தான்.இருப்பினும் அவரது சாதனை முயற்சியை மனமுவந்து பாராட்டிய 23 பேர் நம்பிக்கையுடன் அவரது ஸ்கூட்டரில் ஏறி உட்கார்ந்தனர்.

மெல்ல மெல்ல சாதனை இலக்கை நோக்கி ஸ்கூட்டர் நகரத் தொடங்கியது.என்ன ஆச்சரியம்!இலக்கு வைத்ததை விட 10 மடங்கு கூடுதலாக அதாவது ஒரு கி.மீ. தூரம் வரை அந்த ஸ்கூட்டரை ஓட்டிப் பார்வையாளர்களை அசத்தினார் கோலின்.

வெறும் 9 பி.எச்.பி.திறனை வெளிப்படுத்தும் ஆற்றல் கொண்ட 125 சி.சி.எஞ்சின் இத்தனை பேரையும் திக்கித் திணறாமல் இழுத்து வந்ததும் இந்தச் சாதனையில் குறிப்பிடப்பட வேண்டிய விடயம்.

மேலும் இந்த சாதனையை வீடியோவாக பதிவு செய்து கின்னஸ் புத்தகத்திற்கும் அனுப்பி வைத்துள்ளார்.விரைவில் இந்தச் சாதனை கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## உலகில்...

உலகிலேயே மிகவும் நாகரிகமான பெண்ணாக கட்டார் நாட்டு மன்னரின் மனைவி ஷீகா மொஸா பிந்த் நாசர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். வோனிட்டிபேர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

சர்வதேச அளவில் புகழ் பெற்ற பேஷன் பத்திரிகைகளில் ஒன்று வோனிட்டிபேர். இந்த இதழின் வாசகர்கள் சேர்ந்து உலகிலேயே மிகவும் நாகரிகமான பெண்ணாக மொஸாவைத் தேர்வு செய்துள்ளனர். இஸ்லாமிய உலகைச் சேர்ந்த ஒரு பெண் இந்தப் பெருமையைப் பெறுவது இதுவே முதல்முறை என்று கூறப்படுகிறது.

கட்டார் நாடு ஒரு இஸ்லாமிய நாடாக இருந்தபோதிலும் மொஸா,புர்க்கா அணிவது கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், அவர் அழகழகான உடைகளையும் பேஷன் டிசைனர் உடைகளையும் அணிவது வழக்கம். அடிப்படை மற்றும் உயர் கல்விக்கான யுனெஸ்கோவின் நல்லெண்ணத் தூதுவராகவும் அவர் இருக்கிறார்.

உலக அளவில் சிறந்த முறையில் ஆடை அணியும் நாகரிகமான பெண்மணிகள் வரிசையில் அவருடன் பிரெஞ்சு ஜனாதிபதியின் மனைவி கார்லா ப்ரூனி, மொனாக்கோ நாட்டு இளவரசி சார்லீன் ஆகியோரும் இணைந்து தேர்வாகியுள்ளனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு நடந்த ஒரு கருத்துக் கணிப்பிலும் மொஸாவின் பெயர் இடம்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.








# திருமணம் சுமையா?

நண்பர்கள் யாராவது திருமணத்திற்கு அழைப்பிதழ் கொடுத்தாலே ஐயோ பாவம் என்ற ரீதியில்தான் அதனை வாங்கும் பழக்கம் இன்றைய இளைஞர்களிடையே உள்ளது. திருமணம் பற்றிய பேச்சை எடுத்தாலே காததூரம் ஓடுபவர்கள் தான் இருக்கின்றனர். திருமணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர் என்பது பழமொழி. அதனைப் போற்றிப் பாதுகாப்பது அனைவரின் கடமை. திருமணம் என்பது அர்த்தமுள்ள வாழ்க்கையின் ஆரம்பம் எனலாம்.

சந்தர்ப்ப சூழ்நிலைகளால் திருமணம் செய்ய இயலாதவர்கள் உடல் ரீதியாகக் கெட்டுப்போகிறார்கள். அவர்களுக்கு மன ரீதியான பாதிப்பும் ஏற்படுவதாக ஆய்வில் தெரிய வந்துள்ளது. மனித வாழ்க்கையில் திருமணம் எந்தளவிற்கு அவசியம் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. திருமணத்தின் மூலம் உடல் ரீதியாக பல நன்மைகள் ஏற்படுவது போல மனோ ரீதியாகவும் பல நன்மைகள் விளைவதாக சமீபத்திய ஆய்வு ஒன்று தெரிவித்துள்ளது.

உலக சுகாதார நிறுவனத்தின் மனநலப்பிரிவு மற்றும் நியூஸிலாந்து பல்கலைக்கழகம் இணைந்து கடந்த 10 ஆண்டுகளாக இது தொடர்பான ஆய்வில் ஈடுபட்டது. அதில் 15 நாடுகளைச் சேர்ந்த 34 ஆயிரத்து 500 பேர் ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். இந்த ஆய்வு முடிவுகள் சமீபத்தில் வெளியிடப்பட்டன. இதில் வெளியான சில முக்கிய தகவல்கள்...

இளம்பருவத்தினர் இருபாலாரிடமும் திருமணத்தைப் பற்றி எதிர்மாறான கருத்துகளே இருக்கின்றன. அதாவது திருமணத்தைக் கூடுதல் சுமையாகவும் கவலையாகவும் கருதும் எண்ணம் உள்ளது.



அதிலும் பெண்களை விட ஆண்கள் திருமணம் செய்வதற்கு விருப்பக் குறைவுடன் இருக்கிறார்கள். அதிக மனச்சோர்வு அடைகிறார்கள். அதே நேரத்தில் திருமணம் செய்து கொண்ட பிறகு பெண்களை விட ஆண்கள் அதிகமான மனச்சோர்வு,கவலைகளில் இருந்து விடுபடுகிறார்கள் என்று ஆய்வு தெரிவிக்கிறது.

திருமணம் செய்து கொள்வதால் மனச்சோர்வு,கவலை மற்றும் மனநல பாதிப்புகள் குறைகிறது. டிஸ்ஆர்டர் பாதிப்புகளும் குறைவாக இருப்பதாக ஆய்வில் தெரியவந்துள்ளது. பெண்கள் அதிகம் கல்வி அறிவு பெற்றிருப்பதால் சோர்வு நிலை குறைவாக இருக்கிறது. சிலரிடம் மட்டும் அதிகமிருக்கிறது.

தம்பதிகள் பிரிந்து வாழ்வது, யாரேனும் ஒருவர் இறந்து விடுவது, விவாகரத்து பெற்றுக்கொள்வது போன்ற காரணங்களால் ஏற்படும் மனநல பாதிப்புகள் அதிகரித்துள்ளன. குழந்தைக்காக சார்ந்து வாழ்வதில் பெண்கள் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள்.

# விண்வெளியில் குடிக்க புதுவித பியர் தயார்

விண்வெளியில் குடிப்பதற்கான பியர் உருவாக்கப்பட்டுள்ளது. இதை அவுஸ்திரேலிய நிறுவனம் தயாரித்துள்ளது.

விண்வெளிக்குப் பயணிகளை சுற்றுலா அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. அமெரிக்காவின் வர்ஜின் நிறுவனம் வர்ஜின் கேலக்டிக் என்ற பெயரில் விண்வெளி சுற்றுலாவை அடுத்த ஆண்டு தொடங்கவுள்ளது. விண்வெளியில் 2016 ஆம் ஆண்டுக்குள் ஹோட்டல் அமைப்பதாகவும் சில நிறுவனங்கள் கூறியுள்ளன.




இந்நிலையில், விண்வெளியில் குடிப்பதற்கான பியரை அவுஸ்திரேலியாவின் 4 பைன்ஸ் ப்ரூயிங் கம்பெனியும் அமெரிக்காவின் சாபர் அஸ்ட்ரானமிக்ஸ் நிறுவனமும் இணைந்து உருவாக்கியுள்ளன.

ஸ்பேஸ் பியர் பற்றி இந்நிறுவன ஆராய்ச்சியாளர்கள் ஜரோன் மிசெல், ஜேசன் ஹைல்ட் கூறியதாவது;

விண்வெளியில் புவிஈர்ப்பு விசை கிடையாது. அதனால் வாயு மட்டுமன்றி திரவப் பொருட்களும் மிதக்கும். வயிற்றுக்குள் போன பிறகு வாயுவுடன் சேர்ந்து திரவமும் மேலே எழுந்து வாந்தியாக வெளியேறிவிடும். எனவே, கேஸ் அளவை மிக மிகக் குறைத்து பியர் தயாரிக்கப்பட்டுள்ளது. விண்வெளியில் நாக்கின் சுவை அரும்புகள் சற்று வீங்குவதால் அவ்வளவாக ருசி தெரியாது. எனவே, நாக்குக்கு ருசி தெரியும் வகையில் மிகமிக ஸ்ரோங்காக இந்த பியரை தயாரித்துள்ளோம்.

குயீன்ஸ்லேண்ட் பல்கலைக்கழகத்தின் புவியீர்ப்பு இல்லா மையத்தில் இதற்கான சோதனையும் நடந்து முடிந்துவிட்டது. புவியீர்ப்பு விசை இல்லாத இடத்தில் ஜெட் விமானத்தை குட்டிக்கரணங்கள் போட வைத்து அதில் ஒருவருக்கு இந்த பியர் கொடுத்தும் சோதனை நடத்தப்பட்டுள்ளது. சோதனை வெற்றிகரமாக முடிந்துள்ளது.



# அணுக்கழிவுகளின் குப்பை கொட்டியாகும் மரியானா ஆழி



சமுத்திரங்களினுள் காணப்படும் மிக அழமான பகுதிகளை ஆழிகள் அல்லது அகழிகள் *(Trenches)* எனலாம். இயற்கையின் விந்தை மிகு அமைப்புகளில் ஒன்றாகக் கருதப்படும் ஆழிகள் புவிமேலோட்டின் மிக மெல்லிய பகுதியாகக் காணப்படுகின்றன. அத்துடன் இந்த ஆழிகள் யாவும் புவித் தகட்டோட்டு *(Tectoinc Plates)* செயற்பாடுகளினால் உருவானவையாகும்.

புவித் தகட்டோட்டு எல்லைகளில் காணப்படும் இந்த ஆழிகளில் அதிகமானவை பசுபிக் சமுத்திரத்திலேயே காணப்படுகின்றன. அந்த வகையில் உலகின் மிக ஆழமான ஆழியாக கருதப்படும் மரியானா ஆழியானது பசுபிக் சமுத்திரத்தில் மரியானத் தீவுகளுக்கு அண்மையில் அமைந்துள்ளது.

பசுபிக் தகட்டினதும் பிலிப்பைன் மற்றும் மின்டானோ தகடுகளின் எல்லைகளில் அமைந்துள்ள ழரியானா ஆழியின் ஆழம் ஏறத்தாழ 11,924 மீற்றர்களாகும். புவியின் மிக ஆழம் மிக்க பகுதியாக கருதப்படும் மரியானா ஆழியினுள் புவியின் மிக உயரமான பகுதியாகக் கருதப்படும் 8,848 மீற்றர் உயரமான எவரெஸ்ற் சிகரத்தினை போட்டால் அது முற்றாக மூழ்கிவிடும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்கு பசுபிக் பெருங்கடலில், மரியானத் தீவுகளுக்கு கிழக்கே, வட அகலாங்கு 11 பாகை முதல் 21 பாகைகளுக்கு இடையிலும் கிழக்கு நெட்டாங்குகள் 142 பாகைகள் என்ற புவியியல் அமைவிடத்தில் மரியானா ஆழி அமைந்துள்ளது.

பசுபிக் சமுத்திரத் தகடு மற்றும் பிலிப்பைன்ஸ் தகடுகளுக்கு இடையேயான நகர்வுகள் மூலமே மரியான ஆழி உருவானதாக தெரிவிக்கப்படுகிறது.

பெருங்கவசத் தகடான பசுபிக் தகடானது பிலிப்பைன் மற்றும் மரியானா போன்ற சிறிய தகடுகளுடன் ஒருங்கியதால் மரியான ஆழி உருவானதாக புவியியலாளர்கள் கருதுகின்றனர்.

மரியானா ஆழியின் ஆழத்தை துல்லியமாக கணிப்பதற்காக பல்வேறு ஆய்வுகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்துள்ளன. முதன் முதலில் 1872 மே மாதம் முதல் 1876 ஆம் ஆண்டுவரை சலஞ்சர் ஆய்வுகள் மேற்கொண்ட கணிப்புகளின் படி மரியானா ஆழியின் ஆழமானது 8,184 மீற்றர்கள் [26,850 அடிகள்] என கணிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து 1899 இல் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் படி மரியானா ஆழியின் ஆழம் 9,636 மீற்றர்கள் எனக் கணிப்பிடப்பட்டது.பின்னர் சலஞ்சர் *II* ஆய்வுகள் எதிரொலி முறையை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட போது மரியானா ஆழியின் ஆழம் 10,900 மீற்றர்கள் [35,760 அடிகள்] எனக் கணிப்பிடப்பட்டது.

அதன் பின்னர் 1957 சோவியத் ரஷ்யாவின் வித்யாஸ் கப்பல் மேற்கொண்ட ஆய்வுகளின் பிரகாரம் மரியானா ஆழியின் ஆழம் 11,034 மீற்றர்களாகவும், 1962இல் எம்.பி. ஸ்பென்ஸர் மேற்கொண்ட ஆய்வுகளின் படி 10,915 மீற்றர்கள் எனவும், 1984 இல் ஜப்பானிய ரகுயோ ஆய்வுக் கப்பல் மேற்கொண்ட ஆய்வின் படி 10,920 மீற்றர்கள் எனவும் கணிப்பிடப்பட்டது.

மேற் கூறப்பட்ட கணிப்புகளில் வேறுபாடுகள் காணப்பட்டதைத் தொடர்ந்து புவியியல் மற்றும் கோளவியல்களுக்கான ஹவாய் நிறுவனம் மேற்கொண்ட ஆய்வுகளின் படி மரியானா ஆழியின் சரியான ஆழமாக 11,924 மீற்றர்கள் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

ஏறத்தாழ 2,550 கிலோ மீற்றர் நீளமும், 69 கிலோ மீற்றர் அகலமும் கொண்ட மரியானா ஆழியின் அருகே எரிமலைக் கூட்டங்கள், எரிமலை வில் வளைவுகள் என்பன காணப்படுகின்றன. மரியானா ஆழி தொடர்பாக அதன் அமைப்பு, தன்மை என்பன தொடர்பாக அறிவதற்காக பல்வேறு அமைப்புகளும் செய்மதித் தொழில்நுட்பம் போன்றவற்றின் உதவியுடன் தொடர்ச்சியாக ஆராய்ந்து வருகின்றன.

ஆனால், இன்று உலக வல்லரசு நாடுகள் தமது அணுக் கழிவுகளையும் ஏனைய கழிவுகளையும் மரியானா ஆழியினுள் கொட்டிவருவதால் இன்று அது அணுக் கழிவுக் கூடமாக மாறிவருகின்றது. அத்தோடு அணுப் பரிசோதனை முயற்சிகளும் இங்கு மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக கிரீன் பீஸ் இயக்கம் *(Green Peace Movement)* மரியானா ஆழியினுள் அணுக்கழிவுகள் கொட்டப்படுவது தொடர்பாக எதிர்ப்பு வெளியீட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

த.கஜலக்ஷ்மி




# மாணவர்களைப் பாதிக்கும் கண்பார்வைக் குறைபாடு

தற்போது நிலவுகின்ற சமூக பொருளாதார கட்டமைப்பின் காரணமாக உரிய போஷாக்கான உணவுகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளது. இதனால் மக்கள் பல்வேறு வகையான நோய்களுக்கு உள்ளாகின்றனர்.

இதில் பாடசாலை பருவ வயதினரைத் தாக்கும் மிகவும் கொடிய நோயாக கண் பார்வை குறைபாடு நோய் காணப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பாடசாலை செல்லும் மாணவர்கள் பல்வேறு சுமைகளைத் தாங்கிக் கொண்டு இலட்சியங்களோடும் பல எதிர்பார்ப்புகளோடும் கல்வி கற்கச் செல்கின்றனர். இவர்கள் பாடசாலைக்கு சென்று பெறுகின்ற கல்வியறிவை விட நோய்களையே அதிகளவு பெறுகின்றனர்.

இதற்கு எடுத்துக்காட்டாக சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள ஆய்வில் இலங்கையில் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் பாடசாலை மாணவர்கள் கண்பார்வை குறைபாட்டுக்கு முகங்கொடுத்திருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம் மேலும் நான்கு இலட்சம் பிள்ளைகள் இப்பாதிப்புக்குள்ளாகக் கூடிய அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பாதிப்பிலிருந்து பாடசாலை பிள்ளைகளை பாதுகாப்பதற்கென சுகாதார அமைச்சு ''கண் பார்வை 2020'' என்ற விசேட வேலைத்திட்டமொன்றையும் ஆரம்பித்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பார்வைக் குறைப்பாட்டு பிரச்சினைக்கு முகம் கொடுத்துள்ள பிள்ளைகளுக்கு சீரான பார்வையை மீண்டும் பெற்றுக்கொடுக்கும் நோக்கில், இவ்வேலைத்திட்டத்தின் ஊடாக மூக்குக்கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

இன்றுவரை 20 ஆயிரம் மூக்குக்கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளதாக 'கண் பார்வை 2020' திட்டத்தின் தலைவரும் மேலதிக செயலாளருமான டாக்டர் பாலித்த மஹிபால கூறியுள்ளார். இவ்வாறு பார்வை குறைபாட்டுப் பிரச்சினைக்கு பாடசாலை பிள்ளைகள் முகங்கொடுக்க பரம்பரை அலகு உட்பட சில செயற்பாடுகளும் துணைபுரிவதாகவும் டாக்டர் மகிபால தெரிவித்தார்.

இவ்வாறு பார்வைக் குறைபாட்டுப் பிரச்சினைக்கு பாடசாலை பிள்ளைகள் முகம்கொடுக்க பரம்பரை அலகு உட்பட சில செயற்பாடுகளும் துணைபுரிவதாகவும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு போதியளவு ஊட்டச்சத்தான உணவுகள் உட்கொள்ளாமையினாலேயே பார்வை குறைபாடு ஏற்பட்டுள்ளதுடன் விற்றமின் நிறைந்த சத்தான உணவுகளை உட்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நீர்கொழும்பு தேசிய வைத்தியசாலையின் கண் வைத்திய நிபுணர் டாக்டர் எம்.லியாவுதீன் கூறுகையில்;

மாணவர்கள் மத்தியில் பார்வை குறைபாடு நிலவுவதற்கு சமூக பொருளாதார பிரச்சினையுடன் சிறந்த முறையிலான உணவு பழக்கமின்மையும் காரணமாகவுள்ளது.

கண்களில் ஏற்படும் பார்வைக் கோளாறுகளை இரண்டுவகையாகப் பிரிக்கலாம். முதலாவது 'மயோபியா' கிட்டப்பார்வை குறைபாடு மற்றையது 'ஹைப்பமோட்டிரோப்பியா' தூரப்பார்வை குறைபாடு என்பனவாகும். இதில் 'மயோபியர்' எனப்படும் கிட்டப்பார்வை குறைபாடே அதிகளவு பாடசாலை மாணவர்கள், சிறுவர்களை பாதிக்கின்றது.

இந்தக் கிட்டப்பார்வை குறைபாடுள்ளவர்களுக்கு தொலைவிலுள்ள எழுத்துகள், பொருட்கள் மங்கலாகவே தெரியும். அருகிலுள்ள பொருட்கள் தெளிவாகத் தெரியும். இது பிறந்த குழந்தையிலிருந்து முதியவர் வரை யாருக்கும் வரலாம் பொதுவாக சிறுவயதிலே கண்டுபிடித்து விடலாம்.

தொலைதூர கண்பார்வை குறைவு. தலைவலி, கண்ணில் நீர் வழிதல் ஆகிய பிரச்சினைகள் ஏற்படும். இந்த அறிகுறியுள்ள மாணவர்களுக்குத் தான் வகுப்பறையில், கரும்பலகையில் எழுதும் எழுத்துகள் மங்கலாக தெரிகிறது.

அத்துடன் கண்கள் வேகமாக அடித்தல், அதிக சோர்வு நிலை, கண்ணை சுற்றி வலி ஏற்படும் இவ்வாறான நிலையிலுள்ளவர்கள் உடனடியாக கண்மருத்துவரிடம் கண்களைப் பரிசோதித்து உரிய தீர்வுகளை பெற்றுக் கொள்ள வேண்டும் என்றார்.

உலகளாவிய ரீதியில் 180 மில்லியன் மக்கள் கண்பார்வைக் குறைப்பாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 45 சதவீத்தினர் முற்றிலும் கண்பார்வையை இழந்துள்ளனர். 18 முதல் 20 சதவீதத்தினர் கண்புரை நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர். உலக வங்கியின் உதவியுடன் தேசிய பார்வை இழப்புத்தடுப்புத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் சுகாதார அமைப்புகளின் மூலமும் தன்னார்வ அமைப்புகளின் உதவியுடனும் இலவசமாக சிகிச்சை முகாம்கள் அமைக்கப்பட்டு இலவச கண்சிகிச்சைகள் வழங்கப்படுவதாகவும் சுகாதார அமைச்சின் அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இளம் பராயத்தினரிடையே ஏற்படும் கண் பார்வைக் குறைபாட்டை நிவர்த்திப்பதற்கு பழங்கள், கரட், மீன் உள்ளிட்ட ஊட்டச்சத்துள்ள உணவுகளை உட்கொள்ள வேண்டும் இதனால் மாணவப்பருவத்தில் ஏற்படும் பார்வை குறைபாட்டைக் நிவர்த்தி செய்யமுடியும்.

எதிர்காலத்தில் நோயற்ற மாணவர் சமுதாயத்தை உருவாக்குவதற்கு ஆரம்பத்திலிருந்தே பெற்றோரும் சம்பந்தப்பட்ட அமைச்சுகளும் உரியதிட்டங்களை முன்னெடுத்து போசாக்கான உணவுகளையும் மாணவர்களின் வயதுக்கு ஏற்றவகையில் பாடப்புத்தகங்களை ஒழுங்கமைப்பதும் காலத்தின் தேவையாகவுள்ளது.

இதேவேளை தமது பாடசாலைகளில் கல்விகற்கும் மாணவர்களிடையே கண் பார்வை குறைபாடுகள் உள்ளிட்ட உளவியல் ரீதியான பாதிப்புக்களுக்குள்ளாகின்றனவா என்பதை கண்டறிவதற்கு பாடசாலை ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்படவேண்டியது அவசியமாகவுள்ளது.

**எச். ஹுஸ்னா**

மருத்துவம்



# காதல் உணவுகள்

கஜுராஹோவையும் காம சூத்திரத்தையும் உலகுக்கு அளித்த இந்தியாவில் 30 கோடி மக்கள் பாலியல் குறைபாடுகளுடன் வாழ்வதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அதனால்தான் புராதன இந்திய சமையல் குறிப்புகளில் காதலைத் தூண்டும் உணவுப் பொருட்கள் பற்றி எழுதி வைத்துள்ளனர்.

உணவுகள் காதல் செயற்பாடுகளைத் தூண்டுமா? என்ற கேள்விக்கு விஞ்ஞானத்தில் பதில் ஆமாம்! என்றுதான் சொல்லப்பட்டுள்ளது. அந்தந்த ஊருக்கு ஏற்றபடி காதல் உணவுகள் மாறுகின்றன. அரேபியருக்கு ஒட்டகத் திமிழும் ஸ்பெயின் நாட்டவருக்கு குங்குமப்பூவும் சீனர்களுக்குப் பறவைக்கூடு சூப்பும் பாலுணர்வு தூண்டும் உணவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே, இது தொடர்பில் கொஞ்சம் பார்ப்போம்.

ஆண்மை வீரியத்தை அதிகரிக்க துத்தநாகம் இன்றியமையாதது. எல்லாப் பழங்களிலும் காய்கறிகளில் இருக்கும் பொற்றாசியம் ஆண்மை வீரியத்தை அதிகரிக்கும். செலினியம் உள்ள வெண்ணெய்,மீன்கள்,முழுக்கோதுமை, எள் முதலியவைகளும் காதல் உணவுகள்.

மங்கனீஸ் அடங்கிய கொட்டைகள்,விதைகள்,முழுத்தானியங்கள் முதலியவைகளும் பாலியல் ஆற்றலுக்கு உதவும். பொஸ்பரஸ்,தாதுப்பொருளும் தாது விருத்திக்கு உதவும். விற்றமின் இ,சி,ஏ,பி, கொம்ப்ளெக்ஸ், ஃபோலிக் அமிலம், விற்றமின் பி 6, பி 12 இருக்கும் உணவுகள்.

**பிரசித்தி பெற்ற உணவுகள்**

பாதாம் பருப்பு- தொன்றுதொட்டு ஆண்மையையும் மக்களைப் பெற சக்தி அளிக்கும் உணவாகக் கருதப்படுகிறது. கருமிளகு, தேன்,மிளகாய் முதலியன பாலுணர்வைத் தூண்டும் உணவாகக் கூறப்படுகின்றன.

ஆயுர்வேதத்தின்படி கோதுமை அரிசி, உளுத்தம் பருப்பு இவை ஆண்மையை ஊக்குவிக்கும். விந்துவின் தரத்தை உயர்த்தும். சோம்பு சமையலிலும் பயன்படுகிறது. மையலிலும் பயனாகிறது.

பொற்றாசியமும் பி விற்றமின்களும் செக்ஸ் ஓமோனைத் தயாரிக்கத் தேவை. எனவே, வாழைப்பழம் ஒரு ஆண்மையைப் பெருக்கும் முக்கியமான பழமாகக் கருதப்படுகிறது.

உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் துளசி ஆண்களின் பாலுணர்வு ஆர்வத்தைத் தூண்டுகிறது. வாழைப்பழத்தில் உள்ள ஒரு வேதிப்பொருள் செக்ஸ் உணர்வை அதிகரிக்கும். பப்பாளி,மாம்பழம்,கொய்யாப்பழம் இவைகளும் சிறந்த இளமை காக்கும் பழங்கள். கொய்யாப்பழம் பெண்களின் ஜனனேந்திரிய உறுப்புகளின் தசைகளை வலுப்படுத்தும்.

சொக்லேட் ஒரு அன்டி-அக்சிடன்ட். இதில் உள்ள தியோப்ரோமைன் வேட்கையைப் பெருக்கும் பால் அதுவும் எருமைப்பால், தயிர் [பகலில்] மோர், வெண்ணெய், நெய் இவை இல்லாமல் இந்திய உணவுகள் இல்லை. இவையெல்லாம் உடலுறவுக்கு வலிமை ஊட்டும் உணவுகள்.

வெங்காயம் தொன்றுதொட்டு இந்தியாவில், எகிப்தில், அரேபியாவில் ஆண்மை ஊக்கியாகப் பயன்படுத்தப்பட்டு வரும் காய்கறியாகும். அதுவும் வெள்ளை வெங்காயம் சிறந்தது. வெள்ளை வெங்காயத்தை நெய்யில் வதக்கி உண்ண வேண்டும். ஒனியன் சூப் புத்துணர்ச்சி ஊட்டும். இவை தவிர, குடைமிளகாய்,இஞ்சி, செலரி,வெள்ளரி,தனியா இவைகளும் உதவும்.

பூமிக்கு அடியில் விளையும் கிழங்குகள், பூமியின் சக்தியை உறிஞ்சி அதை நமக்களிக்கும். கரட், முள்ளங்கி போன்றவை ஆண்மையைப் பெருக்கவல்லவை. தக்காளியும் சிறந்த பாலுணர்வு ஊக்கி. பிரான்ஸில் இதை காதல் அப்பிள் என்பார்கள்.

மாமிச வகைகளில் நீர்வாழ் பிராணிகளின் மாமிசம் உண்பது நல்லது. கடல் மீன்களைவிட நதிமீன்கள் பாலியல் உணர்வைத் தூண்டும். கடல் முத்துச்சிப்பி சிறந்த ஆண்மைப் பெருக்கியாகக் கருதப்படுகிறது.

வெற்றிலை-உணவுக்குப் பின் தாம்பூலம் தரிப்பது உடலுறவு ஆசையைத் தூண்டும். ஆனால், பாக்கு,புகையிலை,ஆல்கஹால் இவை எதிர்மாறான விளைவுகளை உண்டாக்கும்.

எகிப்தியர்கள் காலத்திலிருந்தே பல பழங்கால மருந்துகள் தேன் அடங்கியவை. மீட் என்ற பானம் தேனிலிருந்து தயாரிக்கப்பட்டது. இது காதல் உணர்வை அதிகப்படுத்தும் மருந்தாகக் கருதப்படுகிறது.

சாதிக்காய்,ஏலக்காய்,குங்குமப்பூ, இலவங்கப்பட்டை இவைகளும் ஆசையை அதிகரிக்கும். குறிப்பாக சாதிக்காய் 'விந்து முந்துதலை' தடுக்கும். இந்த வாசனைத் திரவியங்களை பாலுடன் சேர்த்து உட்கொள்ள வேண்டும். இலவங்கப்பட்டை தான் ஆசையை ஊக்குவிக்கும். அதன் இலைகள் எதிர்மாறாக ஆண்மை ஆசையைக் குறைத்துவிடும்.

**பாலுணர்வைக் குறைக்கும் உணவுகள்**

ஒரு சராசரி மனிதனுக்குத் தேவையான புரதம்,கார்போவைதரரேட், கொழுப்பு, விற்றமின்கள்,தாதுப்பொருட்கள் செறிந்த உணவுகளைத் தேவையான கலோரிகளில் எடுத்துக் கொள்ளாவிட்டால் உடல் ஆரோக்கியத்துடன் பாலியல் திறனும் சிதைந்துவிடும். சீனி,மதுபானங்கள்,கோப்பியில் உள்ள காஃபன் முதலியவை. ஊட்டச்சத்து உணவை உடல் உட்கிரகிக்க விடாது.இதனால் ஆரோக்கியம் குன்றினால் ஆண்மையும் குறையும். எனவே, அதீத காதல் உணர்வுகளால் கஷ்டப்படுபவர்கள் இனிப்பு,சோயா நிறைந்த உணவுகளால் இச்சையை ஓரளவாவது கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

பாலியல் ஆசையைக் கட்டுப்படுத்த உதவும் உணவுகளில் ஒன்று சோயாவிலிருந்து தயாரிக்கப்படும் டோஃபு. சோயா பால் மற்றும் டோஃபூ உடல் துத்தநாகத்தை கிரகிப்பதைத் தடுக்கிறது. வெள்ளரிக்காய்,டர்னிப்,முட்டைக்கோஸ் போன்றவைகளும் செக்ஸ் ஆசையைக் குறைக்கிறது. இந்த உணவுகள் தைரோய்டு செயற்பாடுகளைக் குறைக்கும். தைரோய்ட் தான் பாலியல் உணர்வுகளை கட்டுப்படுத்துகிறது.



# எப்படி இருந்தவங்க... இப்படி ஆகிட்டாங்க...

இந்தி சினிமாவில் நடிக்க விரும்பும் டீன் ஏஜ் பெண்கள் முதலில் தேடிப்போவது 'மொடலிங்தான்' அப்புறம் தானாகவே அவர்களுக்கு சினிமா வாய்ப்பு வந்து விடுகிறது.. அப்படித்தான் இவர்களுக்கு நடந்ததாம்.

**பிபாஷ பாசு:** அம்மணி கொல்கத்தா ரசகுல்லா டாக்டருக்கு படிக்கணும்னு நினைச்சாங்களாம், ஆனால் விதி... மும்பைக்கு கூட்டிட்டு வந்திருச்சு. கொஞ்ச நாள் மொடலிங் பண்ணினாங்க... அஜ்னாபி படத்தில் நடிக்க வாய்ப்புக் கிடைத்தது. இப்போது சினிமாவுலதூள் கிளப்பிக்கிட்டிருக்காங்க.

**தீபிகா படுகோனே:** பெங்களூர் தக்காளி. அப்பா பிரகாஷ் படுகோனே பிரபல பேட்மின்டன் வீரர். பள்ளிக்கூடத்தில் படிக்கும்போதே சினிமாவுல நாட்டம் பேட்மின்டன் ஆடுவாரா இல்ல சினிமாவுல ஆடுவாரான்னு இளசுகள் கிட்ட எதிர்பார்ப்பு. டக்குன்னு மொடலிங்குள்ள நுழைச்சிட்டார். முதல்ல ஒரு கன்னடப்படம்.. பிறகு இந்தியில... 'ஓம் சாந்தி ஓம்'! இப்போ தீபிகாவை நினைச்சாலே ரசிகர்கள் தீப்பிடித்தது போல உஷ்ணமாயிடுறாங்க!

**மல்லிகா ஷெராவத்:** ஆச்சாரமான குடும்பத்தைச் சேர்ந்தவங்க. கல்யாணம் ஆகி கணவரோடு டில்லியில் செட்டில் ஆகி இருந்தாங்க. திடீர்னு சினிமா ஆசை வந்திருச்சு. கணவருக்கு டாட்டா [விவாகரத்து] சொல்லிட்டு மும்பை பறந்திட்டாங்க. மொடலிங், அது இதுன்னு கொஞ்சநாள் கஷ்டப்பட்டாங்க. 'மர்டர்'ன்னு ஒரு இந்திப்படம் கை கொடுத்துச்சு. இன்றைக்கு இந்தி பட உலகின் 'வயாகரா' மல்லிகாதான்.


**மனிஷா கொய்ராலா:** நேபாளத்து பம்பலிமாஸ். டாக்டருக்கு படிக்கலாம்னு நினைச்சாங்க. ஆனா இவங்களுடைய அழகு, இவங்களை மும்பையில் கொண்டு இறக்கிடுச்சு. கொஞ்சநாள் மொடலிங் பண்ணிக்கிட்டு இருந்தாங்க. சவுதாகர்ன்னு இந்திப் படத்தில் நடிச்சாங்க. படம் சூப்பரோ சூப்பர்! இப்போ அம்மாவாக நடிக்கிற அளவுக்கு வந்தாலும் இவரது தளதளப்பு ரசிகர்களுக்கு கிறுகிறுப்புதான்!

**அக்ஷய் குமார்:** இவரது இயற்பெயர் ராஜீவ். வேலை தேடி பாங்கொக் போன இவருக்கு உணவு விடுதியில் வேலை கிடைத்தது. வாடிக்கையாளர் சாப்பிட்டு விட்டு வைத்துப் போன தட்டுக்களை கழுவும் வேலை. அப்படியே கராத்தே, குங்பூ கற்றுக்கொண்டார். இவருடைய வாட்டசாட்டமான உடல்வாகையும், ஸ்டைலையும்பார்த்து, மொடலிங் பண்ணச் சொன்னாங்க. அப்புறமென்ன, அக்ஷய்க்கு சுக்கிரதிசை தான்.

**பிரீத்தி ஜிந்தா:** குற்றவியல் மனோதத்துவ படிப்பில் பட்டம் வாங்கினவங்க மொடலிங் துறையை கலக்கிக்கிட்டு இருந்தாங்க. அப்படியே டி.வி.யிலும் வந்தாங்க. சேகர் கபூர், இவங்களை இந்திப் படத்திற்கு ஒப்பந்தம் பண்ணியிருந்தார். அதற்குள்ள நம்ம மணிரத்தினம் 'தில்சே' படத்தில் நடிக்க வச்சுட்டார். இப்போ பிரீத்திக்கு 'ஜிந்தாபாத்' போடுகிற அளவிற்கு இந்தியா முழுக்க ரசிகர்கள் இருக்காங்க. கிரிக்கெட் அணி உரிமையாளரான இவர் திடீரென்று அணி வீரரை கட்டிப்பிடித்து, ரசிகர்களை எல்லாம் ஏங்க வைக்கவும் செய்வாங்க.



# பெண்மையே உந்தன் பெயர் திறமையோ...



ஆண்கள் உடல் ரீதியாக பலசாலியாக இருந்தாலும் அவர்களை விட பெண்கள் தான் பன்முக திறமை படைத்தவர்கள் என்று உளவியல் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். இல்லத்தை கவனிப்பதில் தொடங்கி, கணவன், குழந்தைகளுக்கு தேவையான பணிவிடைகள் செய்வது வரை அவர்களின் திறமைகள் ஒவ்வொரு விடயத்திலும் சிறப்பாக வெளிப்படுகிறது.

ஆண்கள் சுயநலவாதிகள், அவர்களுடைய சிந்தனை செயற்பாடு எல்லாம் மதிப்பு, வெற்றி, தீர்வு பற்றியே இருக்கும். ஆனால், பெண்களுடைய சிந்தனைகள் எல்லாம் குடும்பம், நண்பர்கள், உறவு பற்றியே இருக்கும்.

குழப்பமான நேரங்களில் ஆண்கள் தனியாக உட்கார்ந்து வானத்தை பார்த்து யோசித்துக் கொண்டிருப்பார்கள். ஆனால், பெண்கள் பிரச்சினைகளை மனதில் போட்டு குழப்பிக் கொள்ளாமல் அன்புக்குரியவர்களிடம் கூறிவிட்டு மறந்துவிடுவார்கள்.

பெண்கள் பலதிறன் கொண்டவர்கள், அவர்களால் ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளைப் பார்க்க முடியும். போனில் பேசிக் கொண்டே அலுவலக வேலையையும் கவனம் சிதறாமல் செய்துவிடக்கூடியவர்கள் பெண்கள். அதற்கேற்ப அவர்களின் மூளையும் வடிவமைந்துள்ளது. ஆனால், ஆண்களால் இப்படி ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்ய முடியாது.


ஆண்கள் பொய் பேசினால் பெண்கள் உடனே கண்டுபிடித்து விடுவார்கள். ஆண்களின் முகபாவனை, அங்க அசைவுகள், வார்த்தை உச்சரிப்பு இவற்றை வைத்தே அதைக் கண்டுபிடிக்கிறார்கள். ஆண்களால் இப்படி கண்டுபிடிக்க முடிவதில்லை. அதனால்தான் அவள் என்னை ஏமாற்றி விட்டாள் என்று தாடி வைத்துக் கொண்டு புலம்பித் திரிகிறார்கள்.

ஒரு ஆண் சந்தோஷமாக இருக்க நல்ல வேலை வேண்டும். கூடுதலாக சந்தோஷமாக நினைக்க மது, மாது ஏதாவது ஒன்று வேண்டும். ஆனால், பெண்களுக்கு நல்ல கணவர், நல்ல உறவு, நல்ல உறவினர்கள், நல்ல பொழுதுபோக்கு, நல்ல சந்தோஷம்... இப்படி எல்லாமே நல்லதாக இருந்தால் மட்டுமே அவர்கள் திருப்தி அடைவார்கள்.

உறவுகளுக்குள் ஒரு பிரச்சினை என்றால் பெண்களால் அவர்களுடைய வேலையில் கவனத்தைச் செலுத்த முடியாது. ஆண்கள் அப்படியில்லை.

பெண்கள் எதையும் சுற்றி வளைத்துத்தான் பேசுவார்கள். ஆசைகளையும் ஒளிவுமறைவாக வெளிப்படுத்துவார்கள். ஆண்கள் அப்படியல்ல. நல்லதோ கெட்டதோ விடயத்தை நேராகப்போட்டு உடைத்துவிடுவார்கள். ஆசையையும் கொட்டித் தீர்த்து விடுவார்கள்.

பெண்கள் எதையும் யோசிக்காமல் பேசிக் கொண்டே இருப்பார்கள். ஆனால், ஆண்கள் எதையும் யோசிக்காமல் செய்வார்கள். சில ஆண்களும் பெண்களும் இதில் உள்ள எல்லா விடயங்களுக்கும் விதிவிலக்கானவர்களாக இருப்பார்கள்.



# அக்கம் பக்கம்

## படித்திருந்தாலும் ஆபத்து

அதிகம் படிக்காத வியாபாரி அவர். நிறையப் பணம் சம்பாதிக்க வேண்டும் என்பது அவரது தீராத ஆசை. புதிது புதிதாக,சிறிய சிறிய தொழில்களைத் தொடங்கி தனது இலட்சியங்களை நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்தார். இப்போது அவர் பெரிய நிறுவனங்களை நடத்தும் தொழில் அதிபராக உயர்ந்து விட்டார்.

கணவர் ஓரளவு படித்தவர் என்றால் மனைவி ஒன்றுமே படிக்காதவர். மனைவிக்கும் பணம் சம்பாதிப்பதில் ஆர்வம் அதிகம். அதனால் கணவருக்குத் தொழிலில் உதவிகளைச் செய்து நிறுவன வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்து வந்தார்.

நன்கு படித்த ஒருவரை பணிக்கு நியமித்து தொழில்களைக் கவனித்தால் இன்னும் நிறைய சம்பாதிக்கலாம் என்ற எண்ணம் அந்தப் பெண்மணிக்கு ஏற்பட்டது. அதன்படி தனக்கு தூரத்துச் சொந்தமான நன்கு படித்த,அழகான ஒரு பெண்ணை நிர்வாகப் பொறுப்பைக் கவனித்துக் கொள்ள அழைத்து வந்தார்.

அந்தப் பெண் நிர்வாகத்தைச் சிறப்பாகக் கவனித்துக் கொண்டார். அதுவரை அனுபவ ரீதியாக வெற்றி பெற்ற அவர்களின் தொழில்கள் இப்போது தொழில்நுட்ப ரீதியாகவும் பல முன்னேற்றங்களைக் கண்டது. அதிக இலாபம் கிடைத்தது. நிறுவனத்துக்கு விருது கிடைக்கும் அளவுக்கு முன்னேற்றம். எனவே, அந்தப் பெண்ணுக்கு நல்ல சம்பளம் கொடுத்து வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்துக் கவனித்துக் கொண்டனர்.

பெண்ணின் வீட்டில் மாப்பிள்ளை தேடினார்கள். அழகு,சம்பாத்தியம்,திறமை இருந்தால் நிறைய வரன்கள் தேடி வந்தன. மாப்பிள்ளை வீட்டாருக்குப் பெண்ணிடம் எல்லாம் பிடித்திருந்தும் கடைசி நேரத்தில் சம்பந்தங்கள் விலகிச் சென்றன.

நான்கைந்து ஆண்டுகளில் சுமார் 30 இற்கும் மேற்பட்டவர்கள் பெண் பார்த்துவிட்டுப் போய்விட்டார்கள். ஆனால், திருமணம் மட்டும் கூடிவர வில்லை. பெண் வீட்டாருக்கு என்ன காரணம் என்றே புரியவில்லை. கடைசி நேரங்களில் திருமணம் நின்றதற்கான உண்மையான காரணம் தெரிந்தபோது அதிர்ச்சியில் உறைந்து போனார்கள் அந்தப் பெண் வீட்டார்.

பெண் மீது முதலாளியின் மனைவி அதிகம் பிரியம் காட்டுவார். முதலாளிக்கும் அவள் மேல் அதிக மரியாதையும் பாசமும் இருந்தது. வீட்டில் நடப்பதையெல்லாம் மறைக்காமல் பகிர்ந்து கொள்ளும் அளவுக்கு ஒளிவு மறைவின்றிப் பழகுவார்கள்.

மாப்பிள்ளைகள் வந்து பார்த்துவிட்டுப் போவதையெல்லாம் முதலாளி மனைவியிடம் அந்தப் பெண் சொல்லியிருக்கிறார். அவள் நிறையப் படித்திருந்ததால் வெளிநாடுகளில் நல்ல பணியில் இருக்கும் வரன்கள்தான் வந்து பார்த்துவிட்டுப் போவார்கள். தகவலைக் கேட்டதும் முதலாளியின் மனைவி சந்தோசத்தை வெளிக்காட்டிக் கொள்வார். இந்த வரனாவது கல்யாணத்தில் முடிய வேண்டும் என்று வாழ்த்துவார்.

ஆனால், அந்தப் பெண்மணியின் மனதில் அவளுக்குக் கல்யாணம் முடிந்துவிடக்கூடாது என்ற எண்ணம் இருந்தது. அவள் திருமணம் செய்து கொண்டால் நமது நிறுவனத்தை விட்டுப் போய்விடுவாள். அதனால் தொழில் பாதிக்கும். நமக்கு இவளைப்போல திறமையான பெண் கிடைக்கமாட்டாள் என்ற எண்ணம் இருந்தது. ஆனால், அவளுக்குத் திருமணமே நடக்கக்கூடாது என்று முடிவு செய்துவிட்டாள்.

மாப்பிள்ளை பார்த்துவிட்டுப்போன தகவலை பெண் சொன்னதுமே நல்லவள் போலப் பேசி மாப்பிள்ளை வீட்டைப் பற்றிய முழுத் தகவல்களை வாங்கி வைத்துக் கொள்வார். பிறகு மாப்பிள்ளை வீட்டாரை ஈமெயில்,போன் நம்பர்களில் தொடர்பு கொண்டு பெண்ணைப் பற்றி இல்லாத பொல்லாததைச் சொல்லியும் மிரட்டியும் திருமணத்தை நிறுத்திவிடுவாள் அந்தப் பெண்மணி.

இந்த உண்மை தெரியும்போது பெண்ணுக்கு 30 வயதாகிவிட்டது. இப்போது வரன்களும் அதிகமாக வருவதில்லை. நல்ல சம்பளத்தையும் கௌரவத்தையும் விட்டுக் கொடுக்கவும் முடியவில்லை. அவர்கள் விட்டுவர முடியாமலும் திருமணம் கைகூடாமலும் இரண்டும் கெட்டான் நிலையில் தவித்து வருகிறார் அந்தப் பெண்.

நீங்கள் திருமணம் ஆகாத பெண்ணாக இருந்தாலும் ஆணாக இருந்தாலும் இதுபோன்ற சிக்கலில் மாட்டிக்கொள்ளாதீர்கள்.

## பாகிஸ்தான் ஜனாதிபதியின் கொள்கையால் வேலை இழக்கும் தூக்கிலிடும் ஊழியர்

பாகிஸ்தானில் 200 இற்கும் அதிகமானோரை தூக்கிலிட்டவர் தற்போது வேறு வேலை தேடிக் கொண்டிருக்கிறார். அதற்குக் காரணம் ஜனாதிபதி ஆசிப் அலி சர்தாரியாம்.

பாகிஸ்தானைச் சேர்ந்தவர் சபீர் மாசிஹ் (27 வயது). இவர் ஒரு கிறிஸ்தவர். அவர் லாகூரில் உள்ள கோட் லக்பட் சிறையில் தூக்குத் தண்டனைக் கைதிகளைத் தூக்கிலிடுபவர். கடந்த 5 ஆண்டுகளாக இந்தப் பணியில் தான் இருக்கிறார். முதல் 3 ஆண்டுகளில் 200 இற்கும் மேற்பட்டோரை தூக்கிலிட்டுள்ளார். அவரது மூதாதையர்களும் இதே பணியைத் தான் செய்துள்ளனர்.

ஆசிப் அலி சர்தாரி தூக்குத் தண்டனையை விரும்பாததால் கடந்த 2 ஆண்டுகளாக யாரும் தூக்கிலிடப்படவில்லை.இது குறித்து ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது;

நான் வேறு வேலையைத் தேடிக் கொண்டிருக்கிறேன். ஆசிப் அலி சர்தாரி ஜனாதிபதியாக இருக்கும் வரையில் யாரையும் தூக்கிலிட அனுமதிக்கமாட்டார். எனது பாட்டனாரின் சகோதரர் தாரா மாசிஹ். அவர் தான் ஜுல்பிகர் அலி பூட்டோவை தூக்கிலிட்டவர்.

கடந்த இரு ஆண்டுகளாகத் தற்போது யாரையுமே தூக்கிலிடாததால் நான் பெயருக்கு தான் வேலைக்குச் சென்று வருகிறேன்.

நான் முதன் முதலாக ஒருவரைத் தூக்கிலிடும்போது பயந்தேன். ஆனால், சிறைக் கண்காணிப்பாளர் எனக்கு தைரியமளித்தார். கொலை செய்தவர்களுக்கு தூக்குத்தண்டனை கொடுப்பது நியாயம் தான். நான் பைபிள் கூறுவதை நம்புபவன். குர்ஆனைப் போன்று பைபிளிலும் பழிக்குப் பழி என்று உள்ளது. எனவே, கொலை செய்தவர்கள் வாழத் தகுதியில்லாதவர்கள்.

எனக்கு மாத ஊதியம் ரூ.10 ஆயிரம். ஒருவரைத் தூக்கிலிட்டால் ரூ.20 கிடைக்கும்.

தூக்கு மேடைக்கு வருபவர்களில் சிலர் அழுவார்கள். சிலர் பிரார்த்தனை செய்வார்கள். ஆனால், இரு சகோதரர்கள் மட்டும் பாடிக் கொண்டே வந்தனர். இறந்தவரின் குடும்பத்தாரிடம் அவர்களை மன்னிப்புக் கேட்குமாறு கூறியதற்குப் பாடினார்கள். நாங்கள் தவறு செய்தோம். சரியாகத்தான் தண்டனை விதித்துள்ளனர் என்றார்கள்.

சிலர் நான் கிறிஸ்தவன் என்பதால் என்னை மாற்றிவிட்டு ஒரு முஸ்லிமை பணிக்கு அமர்த்துமாறு கூறினார்கள். பேர்வேஸ் முஷாரப் பதவிக் காலத்தில் ஏராளமானோர் தூக்கிலிடப்பட்டனர். பைசலாபாத்தில் உள்ள மாவட்ட சிறையில் நான் ஒரே நாளில் 5 பேரைத் தூக்கிலிட்டேன் என்றார். பாகிஸ்தானில் 27 குற்றங்களுக்குத் தண்டனை தூக்கு தான்.

# மாதவி வரைந்த மாண்புறு கடிதங்கள்

தமிழ்ப் பெரியசாமி

சிலப்பதிகாரத்தில் கடிதம் அனுப்பிய நிகழ்ச்சியை இளங்கோ வடிகள் இரண்டு இடங்களில் குறிப்பிட்டுள்ளார். இரண்டு கடிதங்களும் மாதவியால் கோவலனுக்கு எழுதப்பட்டவை. இவ்விரண்டு கடிதங்களின் இரு வேறுபட்ட உட்பொருளும் காப்பியத்தின் பாத்திர மாண்பை விளக்குவதாக அமைந்துள்ளன. இந்திர விழாவின்போது கானல்வரி இசைத்ததால் ஏற்பட்ட ஊடலால் கோவலன் சினங்கொண்டு மாதவியைப் பிரிந்து சென்றான்.

இளவேனிற்காலத்தில் கோவலனின் பிரிவு மாதவியின் உள்ளத்தை வருத்தக் கோவலன்பால் மடல் விடுக்க விழைந்தாள். தாழையின் வெள்ளிய மடலில் சுற்றிலும் பல் மணப் பூக்களைப் பொதித்து செம்பஞ்சுக் குழம்பை மையாகவும் பித்திகை மொட்டினை எழுத்தாணியாகவும் கொண்டு திருமுகம் தீட்டினாள். உலக உயிர்களைத் துணையோடு சேர்க்கும் இளவேனிற்காலம் வந்தது. மாலையில் தோன்றிய சந்திரனும் பிரிவுத் துயரை மிகுவிக்கிறான். மலரம்புகளால் உயிரைக் கொல்லும் ஆட்சி தொடங்கிற்று. அறிந்துகொள்க என அழகுற எழுதினாள். (வேனில் காதை: 56-63)

கடிதத்தை மாதவியிடமிருந்து பெற்றுக்கொண்ட வசந்தமாலை புகார் நகரின் கூலக்கடைத் தெருவிலிருந்த கோவலனிடம் கொடுத்தாள். ஆனால், கோவலனோ அக்கணத்தே சினங்கொண்ட நெஞ்சில் மாதவி நிகழ்த்திய பல வகைக் கூத்துகளையும் நினைவிற்கொண்டு அவள் ஆடல் மகளாகையால் அவளுக்கு அது பொருந்துமெனக் கூறி வசந்தமாலை தந்த கடிதத்தை வாங்க மறுத்துவிட்டான்.

கோவலனின் கடுஞ்சொல்லை வசந்தமாலை கூறக்கேட்ட மாதவி,மாலை வராராயினும் காலை காண்குவம் எனக் கையறு நெஞ்சோடு மலர்ப்படுக்கையின் மீது உள்ளம் பொருந்தாது கிடந்தாள். பின்னர் கோவலனை முயன்று கண்டறிந்த கோசிகன் என்பவன் அவனிடம் மாதவியின் மனத்துயரை எடுத்துக்கூறி அவள் தந்த மண்ணுடைத் திருமுகத்தைக் கொடுத்தான். மாதவியோடு வாழ்ந்த காலத்தில் அவள் பூசிய நெய்வாசம்,கடிதத்தின் கூந்தல் முத்திரையில் கமழ்ந்ததால் கடிதத்தைக் கைவிடாது பற்றி, ஏடுகளை விரித்து எழுதப்பட்டிருந்ததைப் படித்தான்.

அடிகளின் திருவடிகளை வணங்குகிறேன். நான் எழுதியுள்ள கருத்தை மனதில் கொள்வீராகப். பெற்றவர்க்குப் பணிவிடை செய்யாது அவர்களின் கட்டளையின்றி உயர்குலக் கொடியாகிய கண்ணகியோடு இரவில் நகரைவிட்டுப் பிரிந்ததற்கு யான் செய்த பிழையாதென எண்ணி என் மனம் வருந்துகிறது. எனது துன்பத்தைப் போக்குவீராக. பொய்யற்ற அறிவுடைய பெரியோய் உமைப் போற்றுகிறேன் என மாதவி அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தாள்.

**'அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்.**
**வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்**
**குரவர் பணியன்றியும் குலப்பிறப் பாட்டியோடு**
**இரவிடைக் கழிதற்கு என் பிழைப்பு அறியாது**
**கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்**
**பொய்தீர் காட்டிப் புரையோய் போற்றி'**
**(புறஞ்சேரியிறுத்த காதை:87-92).**

என்று பற்றற்ற நிலையில் மாதவி எழுதிய கடிதத்தைப் படித்துணர்ந்த கோவலன், மாதவி குற்றமற்றவள், இது என் குற்றமே எனக் கூறினான். மாதவி தனக்காகக் கடிதத்தில் தெரிவித்த செய்தி, ஒரு சொல்லும் வேறுபடாது தான் தன் பெற்றோருக்குத் தெரிவிக்கத்தக்கதாக உள்ளதை அறிந்தான்.

**'என்பயந் தார்க்கு இம் மண்ணுடை முடங்கல்**
**பொற்புடைத் தாகப் பொருள்உரை பொருந்தியது**
**மாசில் குரவல் மலரடி தொழுதேன்**
**கோசிகாமணி காட்டு'**
**(பு.காதை:96-99)**

எனக் கூறி அக்கடிதத்தைத் தன் பெற்றோரிடம் சேர்க்குமாறு கோசிகனிடம் கேட்டுக்கொண்டான். இரண்டு கடிதங்களும் கண்ணகியை மணந்து பின்னர் தன்னுடன் சேர்ந்த கோவலனைப் பிரிந்த நிலையில், மனத்துயர் பெறாத மாதவி எழுதியவை. இரண்டும் இரு வேறுபட்ட மனநிலையில் எதிரெதிர் உணர்வுகளைக் காட்டும் வகையில் அமைந்துள்ளன. இதுவே மாதவியின் மாண்பைக் காட்ட இளங்கோவடிகள் கையாண்ட உத்தி.

வசந்தமாலை கொண்டு வந்த முதல் கடிதத்தில் மாதவியின் முருகியல் உணர்வும் காதல் கிளர்ச்சியும் நிறைந்து காதலி காதலனுக்கு அனுப்பும் வகையில் அழகுற அமைந்திருந்தது.

கோசிகன் கொண்டு வந்து கொடுத்த மாதவியின் இரண்டாவது கடிதம் முற்றிலுமாக அவளது தெளிவுபெற்ற மனநிலையைக் காட்டுகிறது. முதல் கடிதத்தில் காணப்பட்ட அகச்சார்பு எண்ணங்கள் ஒரு சிறிதும் இதில் இல்லை. மாதவியின் கடிதத்தில் அவளது மனமாற்றம் ஒவ்வொரு சொல்லிலும் பிரதிபலிக்கிறது. அது தந்தைக்கோ, தமையனுக்கோ, ஆசிரியனுக்கோ எழுதும் கடிதம் போல, சொல்லும் பொருளும் அமைந்திருந்தது எனக் கூறுவார் மு.வ.



காதலனாகிய கோவலனை முதன் முதலாக அடிகள் எனும் சொல்லால் விளித்தது, இன்பம் பொதிந்த வாழ்க்கை நிலையினின்று அவள் நிலையாமையை நோக்கி எண்ண வைத்ததைக் காட்டுகிறது. கோவலனோடு கலை வாழ்க்கையும் அவனுக்குப் பின்னர் அற வாழ்க்கையும் வாழ்ந்தவளாகிய மாதவி யாதினும் உயர்ந்தவளே.

# காண்டாமிருகம்

காண்டாமிருகம் ஐந்து வகைகளில் உள்ளன.ஆபிரிக்காவில் கறுப்பு மற்றும் வெள்ளை நிற காண்டாமிருகங்கள் வாழ்கின்றன.இவை இரண்டு கொம்புகளை உடையவை.இந்தியா மற்றும் ஜாவாவில் ஒரு கொம்பு உள்ள காண்டாமிருகங்கள் காணப்படுகின்றன.இவைகளின் பார்வை மந்தமாக இருக்கும்.தன்னைச் சுற்றிலும் நடக்கும் எந்த விடயங்களைப் பற்றியும் கவலைப்படாது.ஆனால்,கோபம் வந்தால் அனைவரையும் கதிகலங்கச் செய்துவிடும்.பெரிய உடலுடன் காணப்படும் இத்தகைய காண்டாமிருகங்கள் மணிக்கு 30 மைல் வேகத்தில் ஓடி எதிரிகளைத் துரத்தி அடிக்குமாம்.இவைகளின் கால்கள் குட்டையானவை.மூன்று விரல்கள் மட்டுமே உள்ளன.சிவற்றிற்கு கொம்புகள் பெரிதாக இருக்கும்.இவைகளின் சருமம் மடிப்பு மடிப்பாக போர்வையை போர்த்தியது போன்று காணப்படும்.தனியாகவும் கூட்டத்தோடும் காணப்படும்.இவை ஒரு குட்டி மட்டும் போடும்.இவைகளின் கர்ப்ப காலம் 18 மாதங்கள், ஆயுள் காலம் 50 ஆண்டுகள்.






## எவ்வளவு தொலைவு?



ரேடார் முறைகளில் மைக்ரோவேவ் அலைகளை அனுப்பி பிரதிபலித்து சூரியனில் இருந்து அதன் குடும்பத்தில் உள்ள கோள்கள் ஒவ்வொன்றும் எவ்வளவு தூரத்தில் உள்ளன என்று கண்டுபிடித்துள்ளார்கள்.கோள்களின் தூரங்கள் (கோடி கிலோ மீற்றர்களில்) பற்றிய விபரம் வருமாறு;

புதன்-5.79
வெள்ளி-10.82
பூமி-14.95
செவ்வாய்-22.79
வியாழன்-77.83
சனி-142.80

## மேகங்கள் பலவிதம்



மேகங்கள் என்பது படிந்த நீர்த்துளிகள்.காற்றில் ஈரம் இருக்கிறது.வெப்பநிலை அதிகமாகும்போது இந்த ஈரம் மேலே போகிறது.இது மேலே போகப்போக வெப்பநிலை குறைகிறது.அதற்கு கன்டென்சேஷன் என்று பெயர்.பல்வேறு உயரங்களில் காற்றின் ஈரப்பதத்திற்கு ஏற்ப அவை மேலே சென்று படிகின்றன.அப்போது வெப்பக்காற்று மேகங்களின் மீது படும்போது அவை ஆவியாகி வேறுவடிவத்திற்கு மாறுகின்றன.காற்று,ஈரப்பதம், வெப்பம் இவற்றிற்கேற்ப வானத்தில் நிகழும் காட்சி மாற்றம்தான் மேகங்களாக நமக்குத் தெரிகின்றன.மேகங்களுக்கு அவற்றின் உயரம் மற்றும் வடிவத்திற்கேற்ப பெயர் வைத்திருக்கின்றனர்.கோலிபிளவர் வடிவில் மேகங்களை அடிக்கடி பார்த்திருப்போம்.அவற்றை க்யூமுலஸ் என்பர்.அதிலேயே உயரமாக சுறுசுறுப்பாக இருந்தால் க்யூமுலோ நிம்பஸ் தட்டையாக அருகில் தெரியும் மேகங்கள் ஸ்ட்ரேட்டஸ் மிகவும் உயரமாக தெளிவற்ற நிலையில் சிதறிக் கிடக்கும். மேகத்திற்கு சிர்ரஸ் என்றும் பெயர்.

## குறுக்கெழுத்துப்போட்டி - 96

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | | 21 | 22 |
| 23 | | | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | 31 | 32 |

**இடமிருந்து வலம்**

1. பூந்தோட்டம்
7. இத்தகைய மனிதர்களை பற்றித்தான் இப்போது அனைவரிடமும் பேச்சு (குழம்பியுள்ளது)
12. கட்டிடத்திற்கு இது முக்கியமானது (குழம்பியுள்ளது)
18. தாளக்கட்டு, அர்ஜுன் நடித்த திரைப்படம் (குழம்பியுள்ளது)
21. இது வந்தால் பத்தும் பறந்துவிடும்.
24. யாருடைய ஆதரவும் இன்றி தானாகத் தோன்றுவது (குழம்பியுள்ளது)
27. ஒப்பனை, மெருகூட்டல் (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. ஆடற்கலை
2. அரசனுக்கு ஆலோசனை சொல்பவன் (குழம்பியுள்ளது)
3. நீதிக்கு புறம்பானது (குழம்பியுள்ளது)
4. கடவுளிடம் பக்தர்கள் வேண்டுவது (குழம்பியுள்ளது)
6. சொல்லக்கூடாத விடயங்களை இப்படிச் சொல்வர் (குழம்பியுள்ளது)
16. மரத்தை அறுக்கப் பயன்படும் வாள். சிலரது வார்த்தைகளும் இது போன்று கூர்மையாக இருக்கும். (குழம்பியுள்ளது)
24. பலருக்கு இது தான் கடவுள் (தலைகீழ்)

பெயர் : ..............................................................

முகவரி : ..............................................................

..............................................................

### குறுக்கெழுத்துப்போட்டி - 94 விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1.கர்ண வேதம் | 1.கவியரசர் |
| 7.விசாகம் | 2.கர்வம் |
| 12.யவனம் | 3.சாணகம் |
| 17.தகரம் | 4.வேதனம் |
| 23.சாதி | 6.சாத்துவிகம் |
| 25. துர்க்காதேவி | 23.காதி |

**250 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**
**மார்லின் மொன்றோ,**
**இல. 155/7 ஜெம்பட்டா வீதி,**
**கொழும்பு-13**

### பாராட்டுப் பெறுவோர்

01. ஏ.மதுமிதா
சாவகச்சேரி.
02. எச்.ஜே.ஹயா
அழுத்மாவத்தை,
கொழும்பு-15.
03. என்.நிஷாந்தினி
பிரதான வீதி,
பதுளை.
04. எம்.எப்.மதிஹா
மதுரங்குளி.
05. கே.எம்.மலர்,
கண்டி வீதி,
திருகோணமலை.

உங்கள் விடைகளை
**Saturday மெயில்**
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

# அமெரிக்கரை மிரட்டும் பூனைகள்



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் உள்ள அமெரிக்க தூதரக வளாகத்தில் பூனைகளின் எண்ணிக்கை பெருகிவிட்டது.இதனால் அவற்றை என்ன செய்வது என்று தெரியாமல் அமெரிக்க தூதரக ஊழியர்கள் குழம்பிப் போயுள்ளனர்.


பூனைகளை பிடித்துக் கொல்வது அல்லது அவற்றை அங்கிருந்து அப்புறப்படுத்துவது ஆகிய இரண்டில் ஏதாவது ஒரு நடவடிக்கையை எடுத்தாக வேண்டும் என்ற கோரிக்கை ஊழியர்களிடையே வலுத்துள்ளதால் இது குறித்து முடிவெடுக்க ஒரு குழுவைப் போட்டுள்ளார் அமெரிக்க தூதர் கிராக்கர்.

காபூலில் உள்ள அமெரிக்க தூதரகம் பலத்த பாதுகாப்பு வலயத்தின் கீழ் வைக்கப்பட்டுள்ளது.அங்கு பணியாற்றும் ஊழியர்கள் பெரும்பாலும் வெளியே செல்வது இல்லை.அப்படிச் சென்றால் தீவிரவாதிகளால் தாக்கப்பட நேரிடும் என்பதால் வெளியில் போவதில்லை.இந்த நிலையில் இந்தப் பாதுகாப்பு வலயத்தைத் தாண்டி ஒரு பெரும் பிரச்சினையை தூதரக ஊழியர்கள் சந்திக்க ஆரம்பித்துள்ளனர்.அது பூனைத் தொல்லை.

இந்த தூதரக வளாகத்தில் கிட்டத்தட்ட 30 பூனைகள் பிக்பொஸ்களாக மாறி உலவி வருகின்றன.இவற்றுக்கிடையே அவ்வப்போது சண்டை மூளும்.அப்போது ஏற்படும் சத்தத்தால் ஊழியர்கள் கிடுகிடுத்துப் போய் விடுகிறார்களாம்.தலிபான் தீவிரவாதிகளையும் அல்-ஹைடா பயங்கரவாதிகளையும் கூட பார்த்துப் பயப்படாத அமெரிக்கர்களுக்கு இந்தப் பூனைச் சத்தம் பெரும் தொந்தரவாக மாறியுள்ளதாம்.

அதை விட அவ்வப்போது எல்லை மீறும் பூனைகள்,தூதரக ஊழியர்களை துரத்துவதும் கடிப்பதும் கூட நடப்பதுண்டாம்.இதனால் பெரும் தலைவலியாகவே இந்தப் பூனைகளை என்ன செய்யலாம் என யோசித்தனர்.ஊழியர்களில் சிலர் இவற்றைப் பிடித்துக் கொன்று விடலாம் என்று கூறினர். அதற்கு ஒரு தரப்பு எதிர்ப்பு தெரிவித்தது.அது பாவம் அவற்றைப் பிடித்து வேறு எங்காவது கொண்டு போய் விடலாம் என்று அவர்கள் ஆலோசனை கூறினர்.என்ன செய்தாவது இந்தத் தொல்லைக்கு முடிவு கட்டுங்கள் என்று ஊழியர்கள் ஒன்றாக முறையிடவே இதற்காக ஒரு குழுவை அமைத்து விட்டார் தூதர் கிராக்கர்.

இந்தக் குழு தற்போது பூனைகளைக் கொல்லலாமா?நாடு கடத்தலாமா என்பது குறித்து யோசித்து வருகிறதாம். ஊழியர்களின் கருத்துக்களைக் கேட்டு



அதன் பின்னர் ஒரு முடிவுக்கு வரவுள்ளனராம்.

இந்தப் பூனைகளை தொல்லையாக நினைக்காத ஊழியர்கள் கூறுகையில்:

நாடு,வீடு,உறவினர்கள் என அனைத்தையும் விட்டு இங்கு வேலை செய்யும் எங்களுக்கு இந்த பூனைகள் பெரும் ஆறுதலாக உள்ளன.நகரின் வெளிப் பகுதிகளுக்கு போக எங்களுக்கு அனுமதி இல்லை.நாங்கள் நடப்பதற்கு கூட சுரங்கப் பாதையை தான் பயன்படுத்த வேண்டியுள்ளது. இதனால் மன உளைச்சல் அடையும்போது அவற்றை பார்த்து பழகி ஆறுதல் அடைகிறோம். பூனைகளும் எங்களுடன் மிக பாசமாக உள்ளன என்கின்றனர்.

பூனைகளை கட்டுப்படுத்த கடந்த ஏப்ரல் மாதம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.அப்போது அவற்றை விரும்புவோர் எதிர்ப்பு தெரிவித்ததால் அந்த திட்டம் கைவிடப்பட்டது.இந்நிலையில் பூனைகளை விரும்புவோருக்கு தற்போது 60 நாட்கள் கொடுக்கப்பட்டுள்ளது. அதற்குள் பூனைகளுக்கு தகுந்த மற்றொரு இடத்தை அமைத்து பராமரித்து கொள்ள வேண்டும்.60 நாட்களுக்குப் பிறகு தூதரகத்தில் சுற்றித் திரியும் பூனைகளை துரத்த நடவடிக்கை எடுக்கப்படும் என பூனை கட்டுப்பாட்டுக் குழு கூறியுள்ளது.

ஆனால் பூனை விரும்பிகள் பூனைகளை அப்புறப்படுத்துவதற்கு தங்களது அதிருப்தியைத் தெரிவிக்க எங்களைக் காப்பாற்றுங்கள் என்று பூனைப் படத்தை போட்ட வாசகத்தை எழுதி அதைத் தட்டி வடிவில் தூதரக வளாகத்தில் வைத்துள்ளனர்.

பேசாமல் அமெரிக்க காங்கிரஸை (பாராளுமன்றத்தைக்)கூட்டி விவாதம் வைத்து முடிவு செய்யலாமே?

## அலுவலக உறவை பாதுகாக்க...

1.தானே பெரியவன் தானே சிறந்தவன் என்ற அகந்தையை விடுங்கள்.

2.அர்த்தமில்லாமலும் தேவையில்லாமலும் பின் விளைவுகள் அறியாமலும் பேசிக்கொண்டேயிருப்பதை விடுங்கள்.

3.எந்த விடயத்தையும் பிரச்சினையையும் நாசூக்காகக் கையாளுங்கள்

4.சில நேரங்களில் சில சில சங்கடங்களை சகித்துத்தான் ஆகவேண்டும் என்று உணருங்கள்.

5.நீங்கள் சொன்னதே சரி செய்ததே சரி என்று கடைசி வரை வாதாடாதீர்கள்.

6.குறிய மனப்பான்மையை விட்டொழியுங்கள்.

7.உண்மை எது பொய் எது என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும் அங்கே கேட்டததை இங்கே சொல்வதையும் விட்டுவிடுங்கள்.

8.மற்றவர்களை விட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள்.

9.அளவுக்கதிகமாக தேவைக்கதிகமாய் ஆசைப் படாதீர்கள்.

10.எல்லோரிடத்திலும் எல்லா விடயங்களையும் அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ இல்லையோ சொல்லிக்கொண்டிருக்காதீர்கள்.

11.கேள்விப்படுகிற எல்லா விடயங்களையும் நம்பிவிடாதீர்கள்.

12.அற்ப விடயங்களையும் பெரிதுபடுத்தாதீர்கள்.



13.உங்கள் கருத்துகளில் உடும்புப் பிடியாய் இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள்.

14.மற்றவர் கருத்துகளை செயல்களை நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்கள்.

15.மற்றவர்களுக்கு உரிய மரியாதையைக் காட்டவும் இனிய இதமான சொற்களை பயன்படுத்தவும் தவறாதீர்கள்.

16.புன்முறுவல் காட்டவும் சிற்சில அன்பு சொற்களை சொல்லவும் கூட நேரமில்லாதது போல நடத்து கொள்ளாதீர்கள்.

17.பேச்சிலும் நடத்தையிலும் திமிர்த் தனத்தையும் தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதை தவிர்த்து அடக்கத்தையும் பண்பாட்டையும் காட்டுங்கள்.

18.அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து அளவளாவுங்கள்.

19.பிணக்கு ஏற்படும்போது அடுத்தவர் முதலில் இறங்கி வரவேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சை தொடக்க முன்வாருங்கள்.

20.தேவையான இடங்களில் நன்றியையும் பாராட்டையும் சொல்ல மறக்காதீர்கள்.பாராட்டுக்கு மயங்காத மனிதனே இல்லை.அதுவே உங்களுக்கு வெற்றியாக அமையும்.

130811-2.indd 11
Process Cyan Process Magenta Process Yellow

# அதிர்ச்சியில் அமலா



அரளிப்பூவில் மெத்தை செஞ்சு ஐப்பசி மழையில் ஊற வச்ச மாதிரி சொத சொதன்னு ஆகியிருக்கு அமலாபாலின் நிலைவரம். அதற்குக் காரணம் மலையாள தயாரிப்பாளர் சங்கம் போட்டிருக்கும் கிடுக்கிப்பிடி. அள்ளி அள்ளிக் கொடுப்பதில் ஆந்திராவோடும், தமிழ்நாட்டோடும் ஒரு காலத்திலும் போட்டி போட முடியாது கேரளாவால்.

இங்கு சாதாரண வில்லன்கள் வாங்கும் சம்பளத்தைத் தான், அங்குள்ள சூப்பர் ஸ்டார்களும், நாயகிகளும் வாங்குகிறார்கள். இவற்றையெல்லாம் பார்த்தால் வளரும்போதே வளமாக செட்டில் ஆகிவிட வேண்டும் என்று நினைக்கும் அமலா பால் என்ன செய்வார்? மலையாளப் படங்களில் நடிக்க அழைத்தால், நான் தமிழில் பிஸி என்கிறாராம் நீலத் தாமரா, ப்ருத்விராஜுடன் ஒரு படம் என்று இவரது புறக்கணிப்பால் எரிச்சலில் இருக்கிறார்கள் சேட்டன்கள். அதற்காக இவர் சொல்வதையெல்லாம் நம்பிக்கொண்டிருக்க முடியாதல்லவா? தீர விசாரித்து கிடைத்த பதிலால் அதிருப்தியுற்ற சங்கம், தொடர்ந்து மலையாளத்தை புறக்கணித்தால் எல்லா மொழிகளிலும் தடை கோருவோம் என்று சாட்டையை சுழற்றிவிட்டது. இதனால் அதிர்ந்து போயிருக்கிறார் அமலா.

லிங்குசாமியின் வேட்டை படப்பிடிப்பில் எதிர்பாராத விதமாக காயமடைந்தார் நடிகை சமீரா ரெட்டி, லிங்குசாமி இயக்கும் வேட்டை படப்பிடிப்பு குற்றாலத்தில் நடந்து வருகிறது. சமீரா ரெட்டி - அமலா பால் சகோதரிகளாக நடிக்கிறார்கள். இந்தப் படத்தில் இருவரும் பாவாடை தாவணியில் ஆடிப் பாடுவது போன்ற பாடல் காட்சியை இங்கு படமாக்கினார் லிங்குசாமி. ஒரு காட்சியில் இருவரும் மொபட்டுகளில் வருவது போல எடுத்தனர். அப்போது தடுமாறி விழுந்துவிட்டார் சமீரா ரெட்டி. இதில் அவருக்கு கை, கால்களில்காயம் ஏற்பட்டு ரத்தம் வழிந்தது. உடனே அருகிலுள்ள மருத்துவமனைக்கு அழைத்துப் போய் முதலுதவி செய்தனர். யூனிட்டிலுள்ளவர்கள் இதனால் சில மணி நேரம் பாதிக்கப்பட்ட இப் படப்பிடிப்பு பின்னர் தொடர்ந்தது. வேட்டை படத்தில் மாதவன் - ஆர்யா நாயகர்களாக நடிக்கின்றனர்.



## ரீமா சென்னின் மிரட்டல்



கவர்ச்சியான போஸ்டரால் என் மானமே போச்சு, ரூபா 1 கோடி நஷ்ட ஈடு கொடுங்க என்று நடிகை ரீமாசென், பிரபல தயாரிப்பாளரை மிரட்டியிருக்கிறார். கடந்த சில நாட்களாக பத்திரிகைகளில் வெளியான சினிமா விளம்பரம் ஒன்றில் நடிகை ரீமாசென் தனது முழு முதுகும் தெரியும்படி படுத்திருப்பா[illegible] இது ரீமா நடித்த பெங்காலி படத்தின் டப்பிங் படத்தில் இடம்பெறும் காட்சி. அதேநேரம் இந்தப் படம் அந்த மாதிரி படமல்ல, அற்புதமான ஆர்ட் பிலிம் என்கிறார்கள் விவரமறிந்த சினிமா பார்ட்டிகள். இதற்கிடையில் ரீமாசென்னின் கவர்ச்சிப் படத்தை போட்டு விளம்பரம் செய்யும் தகவல் ரீமாவின் காதுகளுக்கு எட்டியிருக்கிறது. இதனால் கடுப்பாகிப் போன ரீமா, எரிச்சலும் புகைச்சலுமாக சம்பந்தப்பட்ட டப்பிங் பட தயாரிப்பாளருக்கே போன் அடித்துவிட்டார். உடனே விளம்பரத்தை நிறுத்த வில்லையென்றால் உங்க மேல் ஒரு கோடி ரூபாய் கேட்டு மான நஷ்ட வழக்கு தொடருவேன் என்று எச்சரிக்க, அதிர்ந்து போனாராம் இங்குள்ள தயாரிப்பாளர். அவசரம் அவசரமாக அடிக்கப்பட்ட போஸ்டர்களையெல்லாம் திரும்ப பெற்றிருக்கிறார்கள். உலக அழகி ஐஸ்வர்யா நடித்த இன்னொரு பெங்காலி படத்தையும், இப்படித்தான் செக்ஸ் பட உறவுக்கு விளம்பரம் செய்து கோடிகளை சம்பாதித்தாராம் இந்த தயாரிப்பாளர்.

Saturday சினிமா



7ஆம் அறிவு — சூர்யா, ஸ்ருதி

## 4 டியில் சுட்டி உளவாளிகள்



ஸ்பை கிட்ஸ் என்ற பெயரில் ஆங்கிலத்தில் வெளியான 4 டி படத்தை தமிழில் சுட்டி உளவாளிகள் என்ற பெயரில் வரும் 19 ஆம் திகதி வெளியிட போகிறார்கள் ஸ்பைகிட்ஸ் பெயரில் இதுவரை 3 படங்கள் வந்து சக்கை போடு போட்டுள்ளன. இப்போது 4 வது படம், 4டியில் வெளியாக உள்ளது. முந்தைய படங்கள் 3டியில் வந்தன. ஸ்பைகிட்ஸ் 4வது பகுதி படத்தை ராயர்ட்ரோத்ரிகஜ் இயக்கியுள்ளார். மர்ம சாகசங்கள் நிறைந்த படமாக உருவாகியுள்ளது. ஜூல் மேக் ஹாலேவின் முதல் மனைவிக்கு அக்காள் தம்பியான இரு குழந்தைகள். இரண்டாவது மனைவியாக வருபவள் அக் குழந்தைகளை அழிக்க வில்லனை பயன்படுத்துகிறாள். குழந்தைகள் வென்றார்களா...? என்பது கிளை மார்க்ஸ். மாயமந்திர சக்திகள் பிரமிப்பூட்டும்படி கற்பனைக்கு எட்டாத வகையில் காட்சிப்படுத்தப்பட்டு உள்ளன. வாசனையை உணரும் வகையில் அரோ மாஸ் கோப் இப்படத்தில் புகுத்தப்பட்டு உள்ளதாம். பி.வி.ஆர். பிக்சர்ஸ் நிறுவனம் சார்பில் ரூபா 178 கோடி செலவில் தயாராகியிருக்கும் இந்தப் படம், தமிழில் சுட்டி உளவாளிகள் என்ற பெயரில் வெளியாகிறது.

## இரு வேடங்களில் ஜெயம் ரவி

இந்தியாவை தவிர்த்து வேறு நாடுகளில் இரட்டை வேடத்தில் பெரும்பாலும் யாரும் நடிப்பதில்லை, இந்தியாவில் எல்லாப் புகழும் எங்களுக்கே என்ற அடிப்படையில் இரண்டு முக்கியமான வேடங்கள் இருந்தால் இரண்டிலும் ஒரே நடிகர் என்று நடிப்பதுண்டு நிற்க. விக்ரம் நடிக்கும் ராஜபாட்டையில் அவருக்கு இரண்டு வேடங்கள் என்று கிசுகிசுக்கப்பட்டன. ஆனால் இதனை விக்ரம் மற்றும் படத்தின் இயக்குநர் சுசீந்திரன் மறுத்தனர். ஆதிபகவான் படத்தில் ஜெயம் ரவி இரண்டு வேடங்களில் நடிப்பதாக புதிய தகவல் ஆதிபகவான் அமீர் இயக்கும் படம். ஜெயம் ரவி, நீது சந்திரா நடித்துள்ளனர். பாங்கொக்கில் பெரும் பகுதி படப்பிடிப்பு நடத்தப்பட்டது. ஜெயம் ரவி இந்தப் படத்தில் இரண்டு வேடங்களில் நடிப்பதை அமீரும் ஒப்புக் கொண்டிருக்கிறார். நாயகன், வில்லனா இல்லை வேறு வேடமா என்பது மட்டும் ரகசியம்.





## ...னக்கு கூச்சம் அதிகம் – கத்ரீனா

...வயதில் இருந்தே எனக்கு
...வம் அதிகம் என்று பொலி
...ச்சி நாயகி கத்ரீனா கைப்
...க்கிறார். அவர் அளித்துள்ள
...ல், நான் யாரிடமும் கல
...ப் பழகுவதில்லை. சிறுவ
...ந்தே அதிக கூச்ச சுபாவம்
...ர். எனக்கு அதிக நண்பர்கள்
...து நான் விமான நிலை
...லா, வேறு எங்கேயோ உட்
...ிருக்கும் போதும், நடக்கும்
...் தரையையே பார்த்துக்
...ாடிருப்பேன். அதை ஒரு
...பாசமான சுபாவம் என்று

எல்லோரும் நினைக்கிறார்கள். நாம் தலைதூக்கிப் பார்க்கும் போது யாராவது நம்மைப் பார்த்து சிரித்தால் நாமும் சிரிக்க வேண்டும். பேச வேண்டும். தெரிந்தவர்களானால் பிரச்சினையில்லை. அறிமுகமாகாதவர்களை எதிர் நோக்கினால் பிரச்சினைகள் உருவாகலாம் என்று, என்னை காத்துக் கொள்வதற்காக நான் தரையைப் பார்த்தவாறு நடக்கிறேன். இது கெட்ட பழக்கமாகத் தோன்றினாலும் தப்பில்லை. என்னைப் பாதுகாத்துக் கொள்ள இதை ஒரு நல்ல பழக்கம் என்றே நினைக்கிறேன், என்று கூறியுள்ளார்.

## 20 குழந்தைகளின் அம்மாவான ஹன்ஸிகா



திருமணம் ஆகாமலே 20 குழந்தைகளுக்கு அன்பான 'அம்மா'வாக மாறியிருக்கிறார் நடிகை ஹன்ஸிகா மோத்வானி.

...ந்தைகளை தத்தெடுத்து அவர்களுக்கு
... மாறியுள்ளார் ஹன்ஸிகா. தமிழ் சினி
... இப்போது அதிக படங்களை கைவசம்
...ள்ளவர் ஹன்ஸிகா, அடுத்து அவர்
...ாயுதம், ஒரு கல் ஒரு கண்ணாடி
...் வெளியாக உள்ளன இந்தப் படங்கள்
...ான பிறகு இன்னும் பிஸியாகிவிடுவார்
...கா என்கிறார்கள். இத்தனை பரபரப்
...டுவிலும் மும்பையில் 19 ஆதரவற்ற
...தைகளை தத்தெடுத்திருந்தார் ஹன்ஸிகா.
...து 20ஆவது குழந்தையை தத்தெடுத்

துள்ளார். இவர்களுக்கு வெறும் பண உதவி மட்டும் செய்யாமல், படப்பிடிப்பு தவிர்த்த மற்ற நேரங்களில் இந்தக் குழந்தைகளை பீச், பார்க், சினிமா என வெளியில் அழைத்துப் போய் தேவையானதை வாங்கிக் கொடுத்து சந்தோஷப்படுத்துகிறாராம். இதுகுறித்துக் கேட்ட போது, இந்தக் குழந்தைகளை ஒரு தாயைப் போலவே பார்த்துக் கொள்ள விரும்புவதாக ஹன்ஸிகா கூறினார். ஹன்ஸிகாஇப்போதுதான் 20 வயதில் அடியெடுத்து வைக்கிறார். தனது பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில் தான் இந்த 20ஆவது தத்தெடுப்பைச் செய்ததாக அவர் கூறியுள்ளார். நல்ல விஷயம் பிறந்த நாளை இப்படியும் கொண்டாடலாம்.

...காத்தா – அஜித்





கத்ரீனா கைப்



# வயது ஏற அழகு கூடும்

குழந்தையாக இருக்கும் போது தொடங்கி பேரிளம் பெண்ணாக மாறும் வரை பெண்கள் ஒவ்வொரு கால கட்டத்திலும் அழகுதான். எந்தப் பெண்ணையுமே அழகில்லை என்று கூற யாருக்குமே மனசு வராது. பெண்களின் அழகு என்பது அவருடைய புறத் தோற்றத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதல்ல மாறாக நம்பிக்கை, ஸ்டைல் ஆகியவையும் இணைந்ததே பெண்களின் அழகு.

பெண்கள் எந்த வயதில் மிக அழகாக இருப்பார்கள் என்று ஒரு கணிப்பு நடத்தப்பட்டது. அப்போது 31 வயதில்தான் ஒரு பெண் அழகாக இருப்பதாக அதில் கலந்து கொண்ட ஆண்களும் பெண்களும் தெரிவித்துள்ளனர். இந்த வயதில்தான் பெண்கள் அழகாகவும் கவர்ச்சிகரமாகவும் பார்ப்பதற்கும் பிடித்தமானவளாகவும் இருப்பதாக அந்தக் கருத்துக் கணிப்பு தெரிவித்துள்ளது.

இந்த வயதில்தான் மிகவும் இளமையோடும் பார்ப்பதற்கு அழகாகவும் இருக்கின்றார்கள். இதற்கு அவர்களிடம் அதிகரித்துள்ள தன்னம்பிக்கையே காரணமாக இருக்கும் என்பதும் கருத்துக்கணிப்பில் பங்கேற்றோரின் கருத்தாகும்.

வயது ஏற ஏறத்தான் பெண்களுக்கு அழகு கூடுகிறது என்று 63 சதவீதம் பேர் கூறியுள்ளனர். அதேசமயம், வயது ஏற ஏற பெண்களுக்கு அலட்சியப் போக்கு அதிகரித்து விடுவதாக இதே அளவிலான நபர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். 30 முதல் 31 வயது வரையிலான பெண்கள்தான் மிகவும் ஸ்டைலாகவும் எழிலாகவும் இருக்கிறார்களாம். தோற்றப் பொலிவு மட்டுமல்லாமல் அவர்களது சிந்தனை, செயற்பாடு ஆகியவையும் கூட அழகர்க மாறி விடுகிறது இந்த வயதில்தான்.

பெண்கள் 31 வயதில் தன்னம்பிக்கை மிகுந்தவர்களாக இருக்கிறார்கள் என்று 70 சதவீதம் பேரும், அழகான தோற்றத்துடன் இருப்பதாக 67 சதவீதம் பேரும், ஸ்டைலாக இருப்பதாக 47 சதவீதம் பேரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

அதேபோல, வயது ஏற ஏற பெண்கள் தங்களை மிகவும் பெருமையாக உணர்வதாக 51 சதவீதம் பேர் கூறியுள்ளனர். இதேபோல, இந்த வயதில் ஆண்கள், பெண்களை விட அதிகம் செலவழிக்கிறார்களாம். தங்களை அழகுபடுத்திக் கொள்வதற்காக ஜிம்முக்குப் போவதிலும் தலையலங்காரத்தை கவனமாக பார்த்துக் கொள்வதிலும் இந்த வயது ஆண்கள் அதிக சிரத்தை எடுக்கிறார்களாம்.

# கவனமான 'வயது'

டீன்-ஏஜ் பருவம் என்பது மிகவும் வாழ்வில் முக்கியமான காலகட்டம் பொதுவாக 13-19 வயது வரையிலான பருவத்தை 'டீன்-ஏஜ்' என்கிறோம்.

இந்தக் காலகட்டத்தில் பெண்கள் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பல்வேறு மாறுதல்களை சந்திக்கின்றனர். அவர்களுக்கு பெற்றோரின் அன்பும் அரவணைப்பும் அவசியம்.

தாய்மார்கள் தங்கள் பெண் குழந்தைகளுக்கு அவர்களது உடல் வளர்ச்சி பற்றி அவசியம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். ஏனெனில் உடல் உறுப்பு வளர்ச்சி மாற்றத்தால், உணர்வுப் பூர்வமாக பல விதமான மன உளைச்சலுக்கு டீன்-ஏஜ் பெண்கள் ஆளாகின்றனர்.



எனவே, இந்தப் பருவத்தில் எல்லோருக்கும் இப்படித்தான் உடல் வளர்ச்சி இருக்கும். இது குறித்து கவலைப்பட வேண்டாம் என்பதை பெற்றோர்கள் எடுத்துக் கூறுவது மிகவும் அவசியம்.அத்தோடு வெளியிடங்களிலும் தங்களை பாதுகாத்துக் கொள்வது எப்படி என்பது பற்றியும் அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

சிலருக்கு முகத்தில் பருக்கள் ஏற்படும். இது எண்ணெய் பசையுள்ள தோல், ஓமோன் மாறுபாடுகளால் ஏற்படக்கூடிய சாதாரண ஒரு நிகழ்வே.ஆனால் இந்த வயதுப் பெண்கள் இதை ஒரு நோய் போல கருதுவர். எனவே, இது குறித்து பெற்றோர்கள் தெளிவாக தங்கள் குழந்தைகளுக்கு விளக்க வேண்டும்.

டீன்-ஏஜ் பெண்கள் சந்திக்கும் மிகப் பெரிய துன்பம் அந்நிய ஆடவர்களினால் ஏற்படும் பாலியல் தொந்தரவுதான்.இதனால் எண்ணற்ற பெண்கள் யாரிடமும் பகிர்ந்து கொள்ள முடியாமல் மனச்சிதைவுக்கு ஆளாகின்றனர். ஒரு சிலர் தற்கொலை செய்து கொள்ளும் முடிவுக்குத் தள்ளப்படுகின்றனர். இது போன்ற சூழ்நிலையில் பெண்குழந்தைகளின் மனதைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு அன்பான ஆறுதலான வார்த்தைகளால் வாழ்வின் சூட்சுமத்தை புரிய வைக்க வேண்டியது பெற்றோரின் கடமை.

டீன்-ஏஜ் பருவத்தில் தான் எதையும் செய்து பார்த்தால் என்ன என்ற எண்ணம் தலைதூக்க ஆரம்பிக்கும்.அப்பொழுது பெற்றோர் கூறும் அறிவுரைகளைக் கூட கேட்க மறுத்து தங்கள் இஷ்டம் போல செயற்பட தொடங்குவார்கள். எனவே, டீன்-ஏஜ் பெண்களை கட்டுப்படுத்த வேண்டும் என்று நினைப்பதை விட அன்பினால் அவர்களுக்கு புரியவைக்க வேண்டும்.

இந்த வயதுக்கே உரிய பல்வேறு பிரச்சினைகளால் டீன் ஏஜ் குழந்தைகள், பொதுவாக அதிகம் சாப்பிடமாட்டார்கள். இதனால் இரத்தசோகை ஏற்பட வாய்ப்புண்டு. இவற்றை சரிப்படுத்துவதுடன் ஹீமோகுளோபின் அளவை 10க்கு மேல் வைத்துக் கொண்டால் படிப்பில் முன்னேற்றம், வேலையில் சுறுசுறுப்பு,ஆரோக்கியம் ஆகியவை மேம்படும்.

அடுத்து, இளம் பெண்களுக்கு சுத்தம் பற்றி தாய்மார்கள் எடுத்துக் கூற வேண்டியது மிக மிக அவசியம். நோய் தொற்று வராமல் இருப்பதற்கு சுகாதாரம் மிக முக்கியம். அவர்கள் பயன்படுத்தும் உள்ளாடைகள் குறித்தும் கவனமுடன் இருக்க அறிவுறுத்த வேண்டும். பூப்பெய்துவதில் சில குழந்தைகளுக்கு கால தாமதம் ஏற்படலாம். உடல் உறுப்பு வளர்ச்சி சரியாக இந்தால் 16 வயது வரை பொறுத்திருந்து பார்க்கலாம்.அப்படி இல்லையெனில், உடன் மருத்துவரை அணுகுவது நல்லது.

வேலைக்குச் செல்லும் தாய்மார்கள் தங்களின் டீன்-ஏஜ் பெண்களுடன் தினமும் சிறிது நேரமாவது கட்டாயமாக செலவழிக்க வேண்டும்.அவர்களது உடல்நலம், சந்தேகங்கள், படிப்புப் பற்றி பேச வேண்டும். மனம் விட்டுப்பேச வேண்டும். இது அவர்களிடம் தன்னம்பிக்கையே வளர்ப்பதுடன் தாயுடனான நெருக்கத்தையும் பாசத்தையும் மேம்படுத்தும்.

## உல்லாச ஹோட்டலான இராணுவ முகாம்



ருமேனியாவில் இராணுவ முகாமொன்று உல்லாச ஹோட்டலாக மாற்றப்பட்டுள்ளது.

விடுமுறைகளை செலவிடுவதற்காக வருபவர்கள் இராணுவ முகாமில் திகிலான அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளவும் ஓய்வெடுக்கும் வகையில் படை வீரர்களின் இந்த முன்னாள் இராணுவத் தளம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதில் இராணுவ கவச வாகனங்கள் படுக்கையறைகளாக மாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உல்லாசப் பயணிகள் இராணுவத்தின் கவச வாகனத்தில் அமைக்கப்பட்ட படுக்கையறையை மட்டும் தெரிவு செய்ய வேண்டும் என்பதில்லை. வெற்று பீரங்கி குண்டுகளால் அலங்கரிக்கப்பட்ட படுக்கையறைகளும் அங்கு உள்ளன.

ஓராஸ்டி நகரிலுள்ள இந்த இராணுவ முகாமை 35 இலட்சம் டொலர்களை செலவழித்து உல்லாச ஹோட்டலாக மாற்றியுள்ளனர். இதனூடாக ஓரளவு இராணுவ முகாம் வாழ்க்கை அனுபவத்தை விருந்தினர்களுக்கு வழங்க முடியும் என ஹோட்டல் இயக்குநர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் சில அறைகள், இரகசியமான பாதாள தளத்தில் அமைக்கப்பட்டுள்ளன. 80 ஹெக்டெயர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்த ஹோட்டலில் விருந்தினர்கள், படையணிவகுப்பு, இராணுவத் தாங்கி ஓட்டுதல் மற்றும் துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சி அனுபவங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

இதில் ஒரு இரவு தங்குவதற்கு 80 டொலர்கள் கட்டணமாக அறவிடப்படுகிறது. நோட்கள் தங்குவதற்கான கட்டணம் 240 டொலர்களாகும். காலை மற்றும் இரவு உணவும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளதாம்.

Process Cyan Process Magenta Process Yellow

**இவ்வார மெயிலில் இவர்...**



# லோரா ரெய்ன் ஹோல்ட் சிவெர்

இன்றைய உலகில் நாம் எத்தனையோ கொடுமைகளை அனுபவித்தோம். அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம். அனுபவிப்போம். ஆனால் இக்கொடுமைகளில் மிகவும் கொடியது எமது அடையாளத்தை தொலைத்துவிட்டு நாம் வாழ்வது.

33 வருடங்களாக தான் யாரென்பதை அறியாமல் வாழ்ந்துவந்த ஒரு பெண் மணியின் அடையாளம் கடந்தவாரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அப்பெண் மணிதான் லோரா ரெய்ன் ஹோல்ட் சிவெர்.

ஒரு சில வருடங்கள் அல்ல பிறந்தது முதலே தனது அடையாளத்தை தொலைத்த நிலையிலும் அடையாளம் தெரியாத நிலையிலும் மூன்று தசாப்தங்கள் கிட்டத்தட்ட ஆயுளின் அரைப்பகுதி வாழ்வதென்பது எவ்வளவு கடினமானதொன்று என்பதனை நாம் சிந்திக்க வேண்டும்.

வாழ்க்கையின் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தனது அடையாளத்தை நிரூபித்துக் கொள்ள லோரா எவ்வளவு சிரமப்பட்டிருப்பார்.

கல்வி, தொழில், திருமணம் என்ற வாழ்வின் முக்கிய மூன்று அத்தியாயங்களிலும் தன்னை அடையாளமின்றி ஈடுபடுத்திக் கொள்வதென்பது எவ்வளவு சிரமமான செயல்.

தான் பிறந்தபொழுதே தனது அடையாளத்தை, தாய் தந்தையரை தொலைத்துவிடுவேன் என்று லோரா நினைத்திருக்க மாட்டார்.

ஆனால் அவரது விதியும் ஆட்சியாளர்களின் கொடுங்கோலும் லோராவின் வாழ்க்கைப் பயணத்தை வழிமாற வைத்துள்ளது.

1976 முதல் 1983 வரையான ஆர்ஜென்ரீனாவின் சர்வாதிகார ஆட்சிக்காலத்தில் திருமணம் செய்துகொண்ட தம்பதிகளுக்கு 1978இல் பிறந்தவர்தான் லோரா.

மருத்துவர்களின் பராமரிப்புடன் மருத்துவமனையிலோ அல்லது மருத்துவச்சிகளின் பராமரிப்புடன்.வீட்டில் சகல வசதிகளுடனும் லோரா பிறந்திருக்கவில்லை.

மாறாக கடற்படையின் தொழில்நுட்ப பாடசாலையில் தாயார் சிறையிடப்பட்டிருந்த சமயம் சிறைக்கம்பிகளால் அடைக்கப்பட்ட நிலையிலேயே லோரா பிறந்தார்.

தெரிந்தோ தெரியாமலோ செய்த குற்றம் இழைத்தமைக்காக சிறைக்குச் செல்வதை நாம் பாரிய அவமானமாக கருதும் நிலையில் சிறையினுள் பிறந்தமை என்பது எவ்வளவு மோசமான விடயம் என்பதை நாம் அறியாதவர்களாக இல்லை.

சிறையில் பிறந்து சில நிமிடங்கள் கழிந்த நிலையில் தாயிலிருந்து வேறாக்கப்பட்டு இரகசியமாக வளர்க்கப்பட்டார்.

லோரா மட்டும் இவ்வாறு வளர்க்கப்படவில்லை. லோராவைப் போன்று நூற்றுக்கணக்கான குழந்தைகள் இவ்வாறுதான் வளர்க்கப்பட்டனர்.

இதேவேளை குழந்தை பிறந்தவுடனேயே தாய்மாரை தனிமைப்படுத்தி நிர்வாணமாக்கி விமானங்களில் ஏற்றி கடலில் போட்டு கொலை செய்வதுதான் சர்வாதிகாரிகளின் பணியாக இருந்தது.

இவ்வாறு கொல்லப்பட்ட சுசானா லியோனர் சிவெர் என்பவர்தான் லோராவின் தாயார்.

குழந்தை பிறக்கும் போதே தாயாருக்கும் குழந்தைக்கும் இடையில் திரையால் மறைத்து குழந்தை பிறந்தவுடன் குழந்தையை இராணுவ அதிகாரிகளிடமோ அல்லது உறவினர்களிடமோ ஒப்படைத்து விடுவார்கள்.

இவ்வாறான நிலையில் வளர்ந்து திருமணமான நிலையில் தனது அடையாளம் குறித்து சந்தேகப்பட்டு அதனை உறுதிப்படுத்த முனைந்து அதற்காக பிசோஷா டி மயோவின் பாட்டிமார் அமைப்பினை நாடியுள்ளார்.

இதேவேளை லோராவின் தாய்வழிப் பாட்டியாரும் அந்த அமைப்பை 1982இல் நாடி தனது மகள் மற்றும் மகளின் குழந்தை குறித்து முறையிட்டுள்ளார்.


இந்நிலையில் லோரா அண்மையில் முறையிட்டதை அடுத்து மேற்கொள்ளப்பட்ட மரபணுப் பரிசோதனையின் மூலம் லோராவின் முகவரி அல்லது அடையாளம் நிரூபிக்கப்பட்ட நிலையில் மகிழ்ச்சியாக உள்ளார்.


திருடப்பட்ட குழந்தைகள் என்றே லோரா உள்ளிட்ட குழந்தைகள் அழைக்கப்பட்டனர். இதுவரை 105 பேரின் அடையாளங்கள் உறுதிப்படுத்தப்பட்டுவிட்டன.


லோரா உள்ளிட்ட குழந்தைகளுக்கும் அவர்களது தாய்மார்களுக்கும் நிகழ்ந்தது போல ஓர் அநீதி இவ்வுலகில் வேறொருவருக்கும் இனிவரும் காலங்களில் இழைக்கப்படக்கூடாது.


**யோ.நிமல்ராஜ்**


நாடு முழுவதும் கிறீஸ் மனிதர்கள்
முளைப்பதற்கு பின்னணியில்
எதிர்க்கட்சிகளின்
சதி இருக்கிறது...



கிறீஸ் மனிதன் வந்தா வீட்டுக்காரங்களுக்கு தெரியும்தானே...


சிரிக்க...
சிந்திக்க...!


கிறீஸ் பூதங்களைப் பிடிக்க
பொலிஸாருக்கு
மந்திர பயிற்சி
கொடுக்கப்போறாங்களாமே...


போற போக்கில எங்களையும் கைது பண்ணினாலும்
பண்ணுவாங்க போல...

# மறந்துபோன இணையங்களை தேடுவதற்கு...




Google Chrome

அடடா அந்த இணையத்தளத்தின் முகவரியைக் குறித்து வைக்காமல் போய்விட்டோமே என்று பெரும்பாலான இணையவாசிகள் புலம்பும் வசனம் தான் இது. அதாவது சில தினங்களுக்கு முன் தான் ஒரு இணையத்தளத்தைப் பார்த்திருப்போம். அதன் பிறகு அந்தத் தளம் மீண்டும் நினைவுக்கு வரும்போது அதன் முகவரி மட்டும் கண்ணாமுச்சி காட்டும். எவ்வளவோ முயன்றாலும் அந்தத்தளத்தின் முகவரியை நினைவில் கொண்டு வர முடியாமல் போகும். இது போன்ற நேரங்களில் கைகொடுப்பதற்காக என்றே புக்மார்க்கிங் சேவை தளங்கள் இருக்கின்றன. எந்தத் தளத்தின் முகவரியையும் மறந்துவிட்டுத் தேடி தடுமாறாமல் இருக்கத் தளங்களைப் பார்க்கும் போதே புக்மார்கிங் தளங்களில் குறித்து வைப்பது நல்ல விடயம் தான்.

ஆனால், புக்மார்க்கிங் செய்யப்பட்ட தளங்கள் என்பது பரணில் போடப்பட்ட பொருட்கள் போல ஆகிவிடுவதுண்டு. சேமித்து வைத்ததோடு பலரும் அவற்றைத் திரும்பிக்கூடப் பார்ப்பதில்லை. தாமதமான நீதி பயனற்றது என்பதைப் போல பராமரிக்கப்படாத புக்மார்க்கிங் தளங்களாலும் பயனில்லை. இந்தச் சங்கடத்தை தவிர்க்கும் வகையில் புதியதொரு புக்மார்க்கிங் வசதி அறிமுகமாகியுள்ளது. உண்மையிலேயே புதுமையான புக்மார்க்கிங் சேவை தான் இது. காரணம் ரீ கால் என்னும் அந்த வசதியில் புக்மார்க்கிங் செய்யாமலேயே புக்மார்க்கிங் வசதியைப் பயன்படுத்தலாம். அதாவது நாம் பார்க்கும் தளங்களைக் குறித்து வைக்காமலேயே அவை மீண்டும் தேவைப்படும்போது அழகாக தேடி எடுத்து விடலாம். அதெப்படி புக்மார்க்கிங் செய்யாமலேயே தளங்களைக் கண்டுபிடிக்க முடியும் என்றால் ரீகால் இணையவாசிகள் சார்பில் அவர்கள் விஜயம் செய்யும் எல்லா இணையப் பக்கங்களையும் குறித்து வைத்துக் கொண்டு கேட்கும் போது எடுத்துத் தந்துவிடும்.

கூகுளின் பிரபலமான குரோம் பிரவுசருக்கான விரிவாக்க வசதியாக உருவாக்கப்பட்டுள்ள ரீகாலை ஒருமுறை பொருத்திக் கொண்டு விட்டால் அதன் பிறகு அது ஒரு விசுவாசமான உதவியாளரைப் போல நாம் செல்லும் எல்லா இணையத்தளங்களையும் குறித்து வைத்துக்கொள்ளும். வெறும் முகவரியை மட்டும் அல்லாமல் இணையத்தளத்தில் உள்ள விடயங்கள் அனைத்தையும் சேமித்துக் கொள்கிறது. ஒருவரது இணைய சுவடுகள் முழுவதையும் ரீகால் தனது சேமிப்பில் நிறுத்தி வைத்துக் கொள்கிறது. பின்னர் எப்போது தேவை என்றாலும் நாம் பார்த்த இணையத்தளத்தை தேடிக் கண்டுபிடித்துத் தருகிறது. தேடியந்திரத்தில் தேடுவது போலவே நாம் பார்த்த தளம் தொடர்பாக நினைவில் உள்ள ஏதாவது ஒரு விடயத்தைக் குறிச் சொல்லாகப் பயன்படுத்தி தேடிக் கொள்ளும் வசதியும் உள்ளது.

## விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்



# புற்றுநோயைக் குணப்படுத்தும் தங்கம்

புற்றுநோயைத் தங்கம் குணப்படுத்தும் எனத் தெரியவந்துள்ளது. இதனால் அதற்கு மேலும் பெறுமதி அதிகரிக்கிறது.

ஆபரணங்கள் மற்றும் சிலைகள் போன்றவை செய்யத் தங்கம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தற்போது இது புற்றுநோயைக் குணப்படுத்தவும் உதவும் எனத் தெரியவந்துள்ளது.



இது குறித்த ஆய்வுகளை வெஸ்டர்ன் அவுஸ்திரேலியா மற்றும் கிரிப்த் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த சர்வதேச நிபுணர் குழு மேற்கொண்டது.

அதன்படி தங்கத்தை வேதியியல் மாற்றம் செய்து புற்றுநோய்க்கு சிகிச்சையளிக்கப்பட்டது. அப்போது அதில் உள்ள இரசாயனப் பொருட்கள் புற்றுநோயை உருவாக்கும் செல்களை மட்டுமே அழித்தன. மற்ற செல்களுக்குப் பாதிப்பு எதுவும் இல்லை.

எனவே, தங்கத்தின் மூலமும் புற்றுநோய்க்கு சிகிச்சையளிக்க முடியும் என நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். சாதாரணமாகவே தங்கத்தின் மதிப்பு அதிகரித்து ஏழை மக்களின் எட்டாக் கனியாக உள்ளது.

தற்போது புற்றுநோய்க்கு சிகிச்சையளிக்க பயன்படுத்துவதன் மூலம் அதன் பெறுமதி மேலும் அதிகரிக்கும் நிலையுள்ளது.

# 2012இல் உலகில் என்ன நடக்கும்?



2012ஆம் ஆண்டு அறிவியல் ரீதியாக உலகில் என்ன நடக்கும் என்பதைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் நம்மில் அனைவருக்கும் இருக்கும்.

பல இடங்களில் குறிப்பாக மாயன் கலண்டர் கணிப்புப்படி 2012 டிசம்பர் 12 இல் உலகிற்கு பாதிப்பு வரலாம் என்ற செய்தியும் வெகுவேகமாக மக்களிடையே பரவிவருகிறது. இதைப்பற்றிய அறிவியல் ரீதியான விளக்கத்தை அளிப்பதற்காக ஒரு தளம் உள்ளது.

மாயன் கலண்டரை பொறுத்தவரை இது அதில் கூறி உள்ள அனைத்தும் நடந்து இருக்கிறது. 2012 இல் உலகம் அழியும் என்பது மாயன் கலண்டரில் உள்ள தகவல் என்று பலர் கூறிவருகின்றனர்.

அதற்குப் பின் மாயன் கலண்டரில் எந்தத் தகவலும் இல்லை. அறிவியல் ரீதியாகவும் பூமிக்கு ஆபத்து இருக்கிறது என்று பலர் கூறிக் கொண்டிருக்கும் நிலையில், உண்மையான தகவல்களை அறிவியல் ரீதியாக சொல்ல ஒரு தளம் உள்ளது.

2012 ஐ மக்கள், விஞ்ஞானிகள் எப்படி எல்லாம் கணித்திருக்கின்றனர் என்பதை ஒவ்வொருவரும் தங்களுக்குத் தெரியவரும். அல்லது தெரிந்த தகவல்களை இத்தளத்தில் பகிர்ந்து கொள்ளலாம்.

பூமியின் வயது என்ன என்பதில் தொடங்கி மாயன் கலண்டர் வரை அனைத்தையும் விரிவாகவும் அறிவியல் ரீதியாகவும் விளங்குகிறது. மாயன் கலண்டர் கூறியுள்ளது. எல்லாம் சித்திரம் மற்றும் சில விநோதக் குறியீடுகள் சில சமயங்களில் அதிகாரபூர்வமாக மாயன் கலண்டரில் இப்படித்தான் இருக்கிறது என்று யாரும் துல்லியமாகக் கூறியதில்லை.

ஆனால்,ஒரு நிகழ்ச்சி நடந்தவுடன் அதை மாயன் கலண்டருடன் ஒப்பீடு செய்து ஏற்கனவே இது மாயனில் சொல்லி இருக்கிறது என்பதைத் தெரிவிக்கின்றனர். சில நிகழ்ச்சிகள் மாயன் கலண்டரில் உள்ளதைப் பார்க்கும்போது உண்மையான நிகழ்ச்சிதான் என்பதை மறுக்க முடியாதளவுக்கு ஆதாரமும் உள்ளது.

இதைத் தவிர வானவியல் சம்பந்தமான பிரச்சினைகள் 2012 இல் என்னவெல்லாம் இருக்கிறது என்பதைத் தெளிவாக அனைவரும் புரிந்து கொள்ளும் வண்ணம் விளக்கப்பட்டுள்ளது. கண்டிப்பாக 2012 இல் என்னவெல்லாம் நடக்கலாம் என்று கணிப்பவர்களுக்கு இந்தத் தளம் பதிலாக இருக்கும்.

# காத்திருப்பு



காலை பூஜை அறையிலிருந்து மல்லிகா கற்பூரத்தட்டுடன் வந்தாள். திண்ணையில் அமர்ந்திருக்கும் தன் கணவனை நோக்கி வந்தவள் தட்டை நீட்டினாள். 'இன்னைக்கு சாமிகிட்ட என்ன வேண்டிக்கிட்ட?' என்று கணவர் ராமன் கேட்க 'எனக்கு என்னங்க வேண்டுதல்... எல்லாம் என் புள்ளைக்கு நல்ல பொண்ணு கிடைச்சா போதும்.அதைத் தவிர வேற என்ன வேண்டப் போறேன்?' என்றாள் மல்லிகா.

'அம்மா...' என்ற குரலோடு வந்தான் பாலா. 'நான் ...ஓபிஸ் போறேன்...' என்றவுடன் மல்லிகா 'புரோக்கர் ஒரு வரன் கொண்டு வந்திருக்கார்... என்னப்பா சொல்ல?' என்று பாலாவிடம் கேட்டாள்.

'அம்மா...' என்று அழுத்தி கூறி கோபத்துடன் பார்த்து எதுவும் பேசாமல் சென்றான். ராமன் 'அவன் வேலைக்கு போகும் போது எதுவும் கேட்காதேன்னு சொன்னேனேல, ஏண்டி இப்படி பண்றே?' என்ற கணவர் ராமனின் வார்த்தைகளில் கோபம். 'அவன் இன்னைக்கு என்ன ரகளை கட்டப்போறானோ' என்று கூறியபடியே தன் கையில் இருந்த செய்தித் தாளை கீழே போட்டார் ராமன்.

பாலா ஒரு நல்ல பதவியில் இருக்கிறான். அவன் நெருங்கிய நண்பன் ரவி. இருவரும் பிரிவதே இல்லை. வேலை முடிந்து மதிய உணவு சாப்பிடச் சென்றனர்.

ரவி 'ஏண்டா காலையிலிருந்து ஒரு மாதிரியா இருக்க... என்ன விடயம்?' கேட்டான். 'ஒண்ணுமில்லை! வீட்டுல பொண்ணு பாக்குறாங்கடா! எனக்கு பிடிக்கல. எனக்காக விட்டுக் கொடுத்து போவாளா, அம்மா, அப்பாவ நல்லா பாத்துப்பாளான்னு தெரியலடா' என்றான் பாலா. 'போய்ப்பாரு ! எத்தனை நாள் அப்பா,அம்மா தனியா இருப்பாங்க? அவங்களுக்கும் உனக்கான கடமையை செய்ய ஆசை இருக்காதா?' என்றான் ரவி.

யோசனையுடன் ரவியை பார்த்தான் பாலா. இருவரும் வேலை முடிந்து வீட்டிற்கு சென்றனர். மறுநாள் மாலை வரச் சொல்லியிருந்து பெண் வீட்டிற்கு சென்றனர். இருவருக்கும் பிடித்து திருமண திகதியும் குறித்தனர். திருமணமும் நன்றாக நடந்தது. இரண்டு மாதம் முடிந்தது. பாலா தன் பெற்றோரின் பேரில் வங்கியில் பணம் போட்டு வந்தான். 'அதை அவன் மனைவி பேருக்கே மாத்த சொல்லிடலாம்' என்று பேசிக் கொண்டு இருந்தனர் பாலாவின் பெற்றோர்.

காலையில் பாலா வேலைக்கு செல்லும்போது இந்த விடயத்தை பாலாவிடம் கூறினர். 'அம்மா இது உங்க பேருலதான் இருக்கணும்' என்றான்.

'இல்லடா... உனக்குன்னு குடும்பம் வந்தாச்சு இனி மேல் போற கட்டைக்கு எதுக்கு பணம்?' என்றாள் அம்மா மல்லிகா.

'அம்மா! அவளை பத்தி எனக்கு தெரியும். அவ கண்டிப்பா அவ பேருக்கு பணத்தை மாத்த ஒத்துக்கவேமாட்டா' என்று கூறினான் பாலா. மல்லிகாவுக்கு ஆச்சரியம். 'என்னங்க இவன் என்ன சொல்றான்' என்று கணவனிடம் அந்த ஆச்சரியம் பகிர்ந்து கொண்டாள். திகைப்புடன் கைபேசியில் மகன் பாலாவின் நண்பன் ரவியிடமும் இந்த செய்தியை கூறினாள் மல்லிகா.

## Saturday மெயில் சிறுகதை

பாலாவிடம் ரவி இது பற்றி கேட்டான். 'ஏண்டா! எனக்கு கல்யாணமே வேணாம்னு சொன்னே! புரிஞ்சுக்க மாட்டா, விட்டுக் கொடுக்க மாட்டான்னு புலம்புனே! இப்ப என்னடான்னா காலையில ஏதோ சொன்னேனு அம்மா சொன்னாங்க'.

'அவள் ரொம்ப நல்லவ... எனக்கு வர்றவ எப்படி இருக்கணும்னு நினைத்தேனோ அப்படியே இருக்கா' என்றான் பாலா. ரவி வியப்புடன் பார்த்தான்.

'ஆமாடா! அவளோட மனசை என் கல்யாணத்தப்பவே புரிஞ்சுக்கிட்டேன்' என்று பாலா சொல்ல ஆர்வத்துடன் கேட்டான் ரவி. 'நாலாநீர் சடங்கு நடக்குறப்போ அவளும் நானும் மோதிரத்தை கைவிட்டு எடுத்தோம். அப்ப யாரு ஜெயிச்சான்னு நினைக்கிறே?'

'நீ தாண்டா' என்றான் ரவி.

'இல்லை' என்று பால மறுத்தான்.

'இல்லையா?' என்று அவன் முகம் சுருங்க,

'மோதிரத்தை எடுத்தது அவள் தான். ஆனால் என் கையில் எடுத்துக் கொடுத்தாள். அப்பவே அவள் விட்டுக் கொடுப்பதை புரிஞ்சுக்கிட்டேன். கல்யாணத்துக்கு அப்புறமும் பல விடயங்களில் அவளோட இந்த குணம் தெரியுது. இப்படி ஒரு பொண்ணுக்காக நான் காத்திருந்தது வீண் போகலை' என்றான் பாலா. ரவிக்கு இப்போது புரிந்தது.

நீங்களும் சிறுகதை எழுத விரும்பினால்
2 A4 தாள்களுக்கு மேற்படாத வகையில் எழுதி
Saturday மெயில் சிறுகதை
இல. 68, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு-15
என்னும் முகவரிக்கு அனுப்புங்கள்...

## நீ மனித பிறவி அல்ல!

உன்னோடு நான்
கழித்த அந்த
அழகிய காலத்து
நிழல் பதிவுகளை

என் நெஞ்சம்
இன்றும் மறக்காது
பழக்க தோஷத்தால்
அல்ல..

உன்னோடு புழங்கிய
என் உணர்வுகளில்
இன்றும் அலைகளாய்
தழுவி என் நெஞ்சத்தில்
கொஞ்சிக் குலாவி
மிஞ்சி மகிழ்வுற செய்யுது
நின் சுவடுகள்

மனம் இல்லா சில
ஊனப் பிறவிகளை
விட மனித
நேயத்தையே மனதாய்
கொண்ட நீ
ஊனப் பிறவி அல்ல

மனித குலத்தில்
பிறந்த அந்த
விண் உலகத்து
தேவர்களின்
அரசவையில் அங்கம்
வகிக்கும் தேவகுமாரியே!

## பிரிந்த காதல்கள்

உலக வரலாற்றில்
சேர்ந்த காதல்களை விடவும்
பிரிந்த அல்லது பிரிக்கப்பட்ட
காதல்கள் பற்றித்தான்
அதிகம் பேசப்படுகிறது
சாட்சியாய் தாஜ்மஹால்...
அன்று பிரிந்த மும்தாஜ்
நினைவாய்
சாஜஹான் கட்டிய பளிங்கு
மாளிகை
இன்று காதலர்களால்
அதிகம் நேசிக்கப்படும்

### காதலின் கனவு மாளிகை

சேர்ந்த காதல்களின் கதை
பெரும்பாலும் திருமணங்க
ளோடு அல்லது
முதலிரவோடு...
அதையும் தாண்டி
முதற் குழந்தை பெற்றதோடு
முடிந்து விடுகிறது
ஆனால்

காலச்சக்கரத்தின் வேகத்தில்
சிக்கி சிதைந்து
கண்ணீரோடு பிரிந்து அல்லது
பிரிக்கப்பட்டு
பின்பு இன்னொரு மணம்
முடித்து
புதுவாழ்க்கை போன பின்பும்
கூடவே தொடர்கிறது
முதற்காதலின் பசுமை
நினைவுகள்

தாலி கட்டியவனுக்கு
சொல்லாமல்
தனக்குப் பிடித்தது என்று
குழந்தைக்கு வைத்த முதற் காத
லன் பெயரிலும்....

தன் மனைவிக்குத் தெரியாமல்
பழைய நாட்குறிப்பேட்டில்
அவன் பத்திரப்படுத்தி
வைத்திருக்கும்
பள்ளிக் காதலியின்
புகைப்படத்திலும்...

சொந்த ஊருக்கு போகும்
நாளெல்லாம்
அவள் தவறாமல் போய்
பார்த்துவிட்டு வரும்
முன்பொரு நாள் இருவரதும்
பெயர் பொறித்த
ஆலமரத்திலும்...

படித்த கல்லூரிக்கு எப்போது
போனாலும்
அவன் கொஞ்ச நேரம்
அமர்ந்துவிட்டு வரும்
அன்று அவர்களின்
சந்திப்புக்காய்
இடம் கொடுத்த மர நிழல்
இருக்கையிலும்

கோயில் திருவிழா ஒன்றில்
பல ஆண்டுகள் கழிந்து
பழைய காதலர் இருவர் சந்திக்க
நேர்ந்தபோது
கூட வந்த மனைவிக்கு
தெரியாமல் அவனும்
கூட்டி வந்த தன் கணவனுக்கு
தெரியாமல் அவளும்
சிந்திக் கொண்ட
கண்ணீர்த் துளியிலும்....

இன்னும் இன்னும்
எத்தனையோ வடிவங்களில்...
இப்போதும் வாழ்ந்து கொண்டி
ருக்கிறது
பிரிந்த காதல்கள்....!

**தெ.இந்திரகுமார்**
**புலோலி,**
**பருத்தித்துறை.**

உங்கள் கவிதைகளும் இப்பகுதியில்
வரவேண்டுமானால்
Saturday மெயில்
இல. 68, எலி ஹவுஸ் வீதி,
கொழும்பு-15
என்னும் முகவரிக்கு
எழுதி அனுப்புங்கள்...

## விழிப்படைய வேண்டியோருக்கு...

மனித வாழ்வின்
புல்லாங்குழலாய்
ஸ்வரங்களாய்
பூவையர்கள்

கல்வி வானில்
மிளிர்கின்ற
விடிவெள்ளிகள்

பல துறையில்
ஒளிர்கின்ற
சுடர் விளக்குகள்

கவி பல பாடியே
பெண்ணினத்துக்கு
பெருமை தந்து
இனிமை தந்த
ஔவை பார்

ஒலிம்பிக்கில்
பதக்கம் வென்றே
எம்தேசத்துக்கு
சுகந்தம் தந்த
சுசந்திகாவைப்
பார்

பசுமைப் புரட்சி
செய்து
நோபல் பரிசு
வென்ற
வங்காரிமாத்தாயை
நோக்கு

அந்த தாயின்
இலட்சியத்தை என்
நெஞ்சத்தில்
ஏந்து பெண்ணே

அடுப்பங்கரையில்
அடுப்பூதிய
காலங்கள்
காலமான காலங்கள்

விஞ்ஞானியாய்
மெய்ஞ்ஞானியாய்
விமானியாய்
மிளிர்கின்ற
காலங்கள்
இவை

நம்பிக்கைப்
பூக்கள்
பூக்கட்டும்
எழுந்திரு
பெண்ணே

**ஆ.முல்லைதிவ்யன்,**
**பொலிகையூர்.**




## நான் கொண்ட காதல்

வான் வீதியில்
கூட்டம்;கூட்டமாய்
நீந்திச் செல்லும்
வெண்முகில்

வண்ணக் கலவைகள்
பூசி மெழுகினாற்போல்
வைகறை விழித்தெழும்
செங்கதிரோன்

ஆகாயத் தடாகத்தில்
பவனி வரும்
வெண்பட்டு
பால் நிலவு

மாணிக்க பரல்கள்
அள்ளி தெளித்தாற்
போல்
கண் சிமிட்டி
அழகு காட்டும்
தாரகைகள்

பிரபஞ்சம்
செழித்து உயிர் பெற
பூப்பூவாய்
சொரிந்து கொட்டும்
மழை நீர்

மலை இடுக்கில்
ஜனனித்து
பூமி நோக்கி
சலசலத்து
பாய்ந்து வரும்
நீர் அருவி

ஆழ்கடலில்
துள்ளி விளையாடி
களிப்புறும்
மீன் இனங்கள்

மரக் கொம்பில்
வீடமைத்து
முட்டை இட்டு
குஞ்சு பொரிக்கும்
பல்வகை
பறவை இனங்கள்

அடர் வனத்தில்
தன் உணவை
தானே தேடி
உண்டு வாழும்
விலங்கினங்கள்

மனிதர் தம்

தேவைகளில்
பங்களிப்பு
நல்கிடும்
மரங்கள்

கள்ளம்;கபடம்
வஞ்சகம்; சூது
களவு;பொய்
சற்றுமில்லா
மழலையர்

இயற்கை
எமக்களித்த
அழகையும்
சிறப்பையும்
அற்புதங்களையும்


நித்தமும் காதலிப்பேன்
நேசமுடன்
காதலிப்பேன்
ரசனையுடன்
காதலிப்பேன்

உயிர் எனும்
அதிசயம்
என் உடலில்
தங்கும் வரை

**கற்பிட்டி வஹாப்**



# ஒரு கற்பனை அரசாங்கம்





1947 ஆம் ஆண்டு இந்திய அமைச்சரவையில் இன்றைய நடிகர்கள் இடம் பெற்றிருந்தால்.. வரலாற்றில் மறக்கமுடியாத நிகழ்வு இந்திய தேசம் சுதந்திரமடைந்த நாள். ஆகஸ்ட் 15ஆம் திகதி சுதந்திர இந்தியாவின் முதல் அமைச்சரவை பதவி ஏற்றது.

பிரதமர் ஜவஹர்லால் நேருவின் தலைமையில் பதவியேற்ற 13 பேர் கொண்ட அமைச்சரவையில் ஒரே ஒரு பெண் அமைச்சர் தான். பிரதமர் நேரு வெளியுறவு விஞ்ஞானம் கொமன்வெல்த் உறவு போன்றவற்றை கவனித்துக் கொண்டார்.

சர்தார் வல்லபபாய் பட்டேல் உள்துறை அமைச்சர் டாக்டர் ராஜேந்திர பிரசாத்துக்கு உணவுத் துறை ஒதுக்கப்பட்டது. மவுலானா அபுல்கலாம் ஆசாத் கல்விக்கும் ஜான்மதாய் ரயில்வே மற்றும் போக்குவரத்துக்கும், சர்த்தார் பல்தேவ் சிங் பாதுகாப்புத்துறைக்கும் பாபு ஜெகஜீவன் ராம் தொழிலாளர் துறைக்கும் ஹர்முஜ்ஷி பாபா வர்த்தகத்துக்கும் ரபி அகமத் கித்வாய் தகவல் தொடர்புக்கும் ராஜ்குமாரி அமித்கவுர் சுகாதாரத்துக்கும் பொறுப்பு ஏற்றனர்.

அண்ணல் பிஆர் அம்பேத்கர் சட்டத்துறை அமைச்சரானார். தமிழகத்தைச் சேர்ந்த ஆர்கே சண்முகம் செட்டியார்தான் நிதித்துறை அமைச்சர். ஷ்யாமா பிரசாத் முகர்ஜி தொழில்துறைக்கும், என்.வி.காட்கில் சுரங்கம் மற்றும் சக்தி துறைக்கும் அமைச்சர்களானார்கள்.

இந்த அமைச்சரவையை, இன்றைக்குள்ள நடிகர்- நடிகைகளை/ கிரிக்கெட் வீரர்களை வைத்து அமைத்திருந்தால்..

உடனே ஆளாளுக்கு பொங்கக் கூடாது நடிகர் நடிகைகளின் பின்னால்தானே நாடு போய்க் கொண்டிருக்கிறது. எதையுமே ஒரு நடிகரை முன்னிறுத்தித்தானே நாம் பார்க்கிறோம். பாருங்கள்... காவிரிப் பிரச்சினை எத்தனை தூரத்துக்கு இழுத்துக் கொண்டே போகிறது. ஆனால் நம்மைப் பொறுத்தவரை குற்றவாளிகள் கருணாநிதியோ ஜெயலலிதாவோ அல்லது உச்சநீதிமன்ற தீர்ப்பையே காலில் போட்டு மிதித்த கர்நாடகமோ அல்ல. ரஜினிகாந்த் காவிரி போராட்டத்துக்கு ஆதரவு கொடுத்தால் பிரச்சினை தீர்ந்துவிட்டது. குரல் கொடுக்காமல் ஒதுங்கி நின்றால் தமிழகமும் கர்நாடகமும் பற்றி எரியும் என்ற அளவுக்குதான் நமது தெளிவு உள்ளது.

ஒரு வேளை நாட்டின் முதல் அமைச்சரவையே நடிகர்களைக் கொண்டு அமைந்திருந்தால்...

இதோ நமது தெரிவாக 14 நடிக அமைச்சர்கள் மற்றும் கிரிக்கெட் வீரர்கள் .. இவர்கள் 14 பேரும் இன்றைக்கு களத்தில் உள்ளவர்கள் என்பதை மனதில் கொள்ளவும்.

**பிரதமர் ரஜினிகாந்த்**

பிரதமர்- வெளியுறவு, விஞ்ஞான ஆராய்ச்சி அணுத் தொழில்நுட்பம்,மாநில பொறுப்பு

இந்த மனிதர் என்றைக்கு அரசியலுக்கு வந்து ஆட்சியைப் பிடித்து நேர்மையான ஆட்சியைத் தந்து ...ம்ஹும்... அதற்கு வாய்ப்பிருக்கிறதோ இல்லையோ நமது கற்பனை அமைச்சர்களுக்கு இவர்தான் தலைமை அமைச்சர்.. பிரதமர்.

சொல்லப் போனால் இந்தப் பதவிக்கு அன்றைய சூழலிலும் சரி இன்றைய சூழலிலும் சரி பக்காவாகப் பொருந்தக் கூடியவர் இவர்தான்!

இவர் பிரதமராக இருந்திருந்தால், நேருவின் பஞ்சசீலக் கொள்கை மாதிரி, இவர் ஒரு பஞ்ச சீலக் கொள்கையை வெளியிட்டிருப்பார்.

சும்மா ஒரு ட்ரைலர் பாருங்களேன்...

இந்தியன் யோசிக்காம பேசமாட்டான்.. பேசின பிறகு யோசிக்க மாட்டான்!

இந்த நாடு எப்ப வளரும் எப்படி வளரும்னு தெரியாது.. ஆனா வளர வேண்டிய நேரத்தில் கட்டாயம் வளர்ந்துடும்!

இந்தியாவோட வழி தனி வழி ... சீண்டாதீங்க!

அசந்தா அடிக்கிறது உங்க பொலிஸி .. அசராம அடிக்கிறது இந்தியாவோட பொலிஸி!

அணுகுண்டு உங்க பக்கமிருக்கலாம்... ஆண்டவனே எங்க பக்கம் தான்!

இதெப்டி இருக்கு!

விஞ்ஞான ஆராய்ச்சி, மாநிலங்களை கட்டுப்படுத்தும் டெக்னிக், அணுகுண்டு தொழில்நுட்பத்தை வளர்ச்சிக்கும் போருக்கும் பயன்படுத்துவது என அனைத்தையும் ரஜினி வழியில் யோசித்துப் பாருங்கள்..

நிஜமாவே சுவாரஸ்யமா இருக்குல்ல!

உள்துறை அமைச்சராக யாரை நியமிக்கலாம்.. சஞ்சய்தத்துக்குதான் இந்த வாய்ப்பு. பாவம், எத்தனை காலத்துக்கு பொலிஸ் நீதிமன்றம் என்று அலைவார். மத்திய அமைச்சரவையில் உள்துறை அமைச்சராகி, இந்திய பொலிஸை அலறவிடலாமே!.

உணவுத் துறைக்கு நம்ம நாட்டாமை சரத்குமாரையும், கல்வித் துறைக்கு நெப்போலியனையும் நியமித்துவிடலாம். முன்னவருக்கு ஆனை கட்டிப் போரடிக்கும் நாட்டாமையா நடிச்ச அனுபவமும், பின்னவருக்கு எக்கச்சக்க கல்வி நிறுவனங்களை கட்டி மேய்க்கிற அனுபவமும் கை கொடுக்கும்!

**விஜயகாந்த்**

பாதுகாப்புத் துறை வேற யாருக்கும் கிடையாது. பிரிட்டிஷ்காரங்க சுதந்திரத்தை தரும்போதே ஒரு நிபந்தனையோடு தான் கொடுத்தாங்க அது. பாதுகாப்புத் துறையை மட்டும் விஜயகாந்துக்கு கொடுத்துடணும் என்பதுதான். ராணுவத்துக்கு சம்பளம் மிச்சப்படும் ஒன் மேன் ஆர்மி இவர் ஆயுதங்கள் கூட அவ்வளவா செலவாகாது. காலும் கையும் போதும். ஏகே 47 என்ன செய்துவிடும்!

அடுத்த முக்கியமானது சுரங்கம் மற்றும் சக்தித் துறை. இந்தத் துறை விஜய்க்குதான் ஏன் எதற்கு என்ற கேள்வி உங்களிடமிருந்தால் இன்னொரு முறை நீங்கள் குருவி பார்க்கவும்!

சுகாதாரத் துறைக்கு நம்ம சச்சின்தான் அமைச்சர். இதுக்கும் ஒரு காரணமிருக்கிறது எந்த பொருள் ஹெல்தியானது என ஆராய்ச்சியாளர்கள் உதவியில்லாமல் இவரே கண்டுபிடித்து டிவியில் விளம்பரமும் செய்துவிடுவார். ஒரே ஒரு கஷ்டம். கூடவே கஸ்டம்ஸ் துறையையும் சேர்த்து கவனிப்பேன் என்று அடம்பிடிப்பார். எதற்கு அந்தத்துறை என்கிறீர்களா. பின்னே... பரிசாக வரும் ஆடிக்கும் கோடிக்கும் சும்மா சும்மா வரி கட்டச் சொல்றீங்களே!

யாரும் கேள்வி கேட்கக் கூடாது .. கேட்டாலும் மழுப்பலாக பதில் சொல்வதற்கு ஏற்றதுறை ஒண்ணு வேணுமே.. என்று மோவாயைத் தடவிக் கொண்டிருக்கும் உலக நாயகன் கமல்ஹாஸனுக்கு .. இதோ தகவல் தொடர்புத் துறை!

நிதியமைச்சர் பொறுப்புக்கு அமிதாப் பச்சனை நியமிக்கலாம். ஏபிசிஎல் நெருக்கடியிலிருந்து மீண்டு வந்த அனுபவம் நிறையவே கைகொடுக்கலாம்.

சட்டத்துறைக்கு யாரை நியமித்தாலும் திருமாவளவனோடு மல்லுக்கட்ட வேண்டி வரும். எனவே அவரும் ஒரு நடிகர் என்ற முறையில் சட்டத்துறையை அவர் வசமே ஒப்படைக்கலாம்.

தொழில் துறைக்கு ஷாருக்கும்,தொழிலாளர் துறைக்கும் அஜீத்தும் நம்ம தெரிவு ஏன்? ஒருவர் நல்ல பிஸினஸ் மேன்.. அடுத்தவர் நல்லவோய்ஸ்மேன்!

இந்த அமைச்சரவையிலும் ஒரேயொரு பெண் அமைச்சர் ஓய்வுபெற்ற பார்ட்டியெல்லாம் அதுக்கு சரிப்படாது. நம்ம தெரிவு ஐஸ்வர்யா ராய்தான். பாராளுமன்ற விவகாரத் துறை அவருக்கு அடிதடி அமளி துமளி அதிகமிருக்காது. அதிகபட்ச விசில் சத்தம் வேண்டுமானால் இருக்கலாம் தவறாமல் எல்லோரும் கைக்குட்டை கொண்டுவருவது நிச்சயம்!




# செயற்கை கால்களால் சாதனை

இரண்டு கால்களையும் இழந்து செயற்கை கால்களின் உதவியுடன் உலகளவில் தடகளப் போட்டிகளில் கலந்து கொள்ளும் தென் ஆபிரிக்க வீரர் ஆஸ்கர் பிஸ்டோரியஸ், தனது விளையாட்டு வாழ்க்கையில் மேலும் ஒரு பெரும் முன்னெடுப்பைச் செய்துள்ளார்.

அதாவது அடுத்த ஆண்டு லண்டனில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் நல்ல உடல் வலுவுடன் இருக்கும் விளையாட்டு வீரர்களுடன் கலந்து கொள்ளவிழையும் அவர் அதற்கான தகுதியை பெற்றுள்ளார்.

லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் 400 மீற்றர் ஓட்டங்களில் ஓடுவதற்கு தகுதி பெறும் நேரத்தை இத்தாலியில் இடம்பெற்ற ஒரு விளையாட்டுப் போட்டியில் ஆஸ்கார் பிஸ்டேரியஸ் பெற்றார்.

400 மீற்றர் ஓட்டத்தை 45.07 நொடிகளில் ஓடியதன் மூலம் பிஸ்டோரியஸ் இந்த ஆண்டு நடைபெறவுள்ள உலக தடகளப் போட்டிகளிலும் பங்கு பெற முடியும்.

உடல் ஊனமுற்றவர்கள் பங்கு பெறும் ஒலிம்பிக் போட்டிகளில் சரித்திரத்தில் மிகவும் வெற்றிகரமான ஒரு விளையாட்டு வீரர் ஆஸ்கார் பிஸ்டேரியஸ்.

ஆனால் நல்ல உடல் நலனுடன் இருப்பவர்களுடன் உயர்ந்த மட்டத்தில் போட்டியிட வேண்டும் என்பதே அவரது அபிலாஷையாக இருந்து வந்துள்ளது. அந்தக் கனவு தற்போது நனவாகவுள்ளது.

'பிளேட் ரன்னர்' என்று அழைக்கப்படும் ஆஸ்கார் பிஸ்டோரியஸ், கார்பன் இழைகளால் உருவாக்கப்பட்ட செயற்கை கால்களைப் பொருத்திக் கொண்டு போட்டிகளில் கலந்து கொள்கிறார். மேலும் உலக தடகளப் போட்டிகளில் கலந்து கொள்ளவிருக்கும் உடல் ஊனமுற்ற முதல் விளையாட்டு வீரர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.


இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் உலக தடகளப் பேராட்டிகள் அடுத்த மாதம் தென் கொரியாவில் இடம்பெறவுள்ளது.

இத்தாலியில் இடம்பெற்ற போட்டியில் 400 மீற்றர் தூரத்தை 45.07 விநாடிகளில் ஓடியதன் மூலம் தனது முந்தைய சாதனையையும் அவர் முறியடித்துள்ளார். தற்போது ஓடிய வேகத்தின் மூலம் லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் அவர் பங்கு பெறுவதற்கான தகுதியையும் ஆஸ்கார் பிஸ்டோரியஸ் அடைந்துள்ளார்.

தற்போது 24 வயதாகும் இவர் பதினொரு மாதக் குழந்தையாக இருந்த போது ஏற்பட்ட ஒரு நோயினால் இவரது இரண்டு கால்களும் வெட்டி அகற்றப்பட்டன. 2008 ஆம் ஆண்டு பீஜிங் ஒலிம்பிக்ஸ் போட்டியில் கலந்து கொள்ள நிர்ணயிக்கப்பட்ட தகுதி நேரத்தை அடைய முடியாததால் அப்போட்டிகளில் அவர் பங்கு பெற முடியாத நிலை ஏற்பட்டது.

பீஜிங் போட்டிகளில் இவர் பங்கு பெறலாம் என்பதைக் கூட நீண்ட ஒரு சட்ட மோதலுக்கு பிறகே சர்வதேச தடகள சம்மேளனம் அனுமதித்தது. கார்பன் இழைகளால் செய்யப்பட்ட பிளேடுகளை பொருத்திக் கொண்டு ஓடும் இவருக்கு அதன் மூலம் மற்றப் போட்டியாளர்களுக்கு இல்லாத வகையிலான ஒரு அனுகூலம் இருப்பதாக சர்வதேச தடகள சம்மேளனம் வாதிட்டு வந்தது.






# ஆபத்தான முயற்சி கைவிடப்பட்டது

சுறா மீன்கள் நிறைந்த புளோரிடா ஜலசந்தி வழியாக பாதுகாப்புக் கூண்டு இல்லாமலேயே கூபா தீவிலிருந்து அமெரிக்காவுக்கு கடலில் நீந்திக் கடப்பது என்ற இதுவரை யாரும் செய்யாத ஒரு விடயத்தை செய்து காட்டும் தனது முயற்சியை அறுபத்தொரு வயதான டயனா நியாட் என்ற அமெரிக்கப் பெண்மணி கைவிட்டுள்ளார்.

இருபத்தொன்பது மணி நேரங்களில் கடலிலிருந்து இவர் காற்றும் நீரோட்டமும் நீச்சலுக்கு எதிரானதாக இருந்தது என்பதால் தனது முயற்சியைப் பாதியில் கைவிட்டார்.

சுறா மீன்களை அருகில் நெருங்கவிடாது செய்யும் விசேட மின்னணுக் கருவிகளின் உதவியுடன் பாதுகாப்புக் கூண்டு இல்லாமலேயே இந்த ஜலசந்தியை நீந்திக் கடக்க அவர் செய்திருந்த இரண்டாவது முயற்சி இது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கியூபாவின் தலைநகர் ஹவானாவிலிருந்து தனது நீச்சல் பயணத்தை தொடங்கியிருந்தார்.

கியூபாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே முழுமையான ராஜதந்திர உறவுகள் இல்லாத நிலையில் இந்தப் பயணத்தை அவர் மேற்கொள்ள ஒரு ஆண்டுக்கும் மேலாக பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றிருந்தன.

டயானா நியாட் 1970 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உலகின் மிகச் சிறந்த நீண்ட தூர நீச்சல் வீராங்கனையாக இருந்தவர். ஆனாலும், முன்னர் கியூபாவிலிருந்து தொடங்கி அமெரிக்காவுக்கு செல்ல முன்னர் எடுத்த முயற்சி தோல்வியில் முடிவடைந்தது.

இந்தப் பெரும் முன்னெடுப்பில் அவருக்கு துணையாக மருத்துவர்கள் ஊட்டச்சத்து நிபுணர்கள் மற்றும் சுறா மீன்களிலிருந்து அவரை பாதுகாக்க வல்லுநர்கள் என பலர் சென்றிருந்தனர்.

டயானா நியாட் நீந்திச் செல்லும் போது அவருக்கு இருபக்கமும் துடுப்புப் படகில் ஆட்கள் சென்றிருந்தனர்.









# கேள்விக்குறியாகிறது ஒலிம்பிக் பாதுகாப்பு

லண்டனில் இடம்பெற்ற கலவரத்தையடுத்து அடுத்த ஆண்டு கோடை காலத்தில் லண்டனில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியின் பாதுகாப்பை மறுபரிசீலனை செய்ய பரிட்டிஷ் அரசு தீர்மானித்துள்ளது.

லண்டனில் மாபியா கும்பலொன்றை சேர்ந்தவர்கள் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்ததையடுத்து லண்டனில் பெரும் கலவரம் வெடித்தது. இதனைப் பொலிஸாரால் உடனடியாக கட்டுப்படுத்த முடியாதுபோகவே அது பெரும் வன்முறையாக மாறியது.

கடைகள், வர்த்தக நிலையங்கள், பொதுக் கட்டிடங்கள், பொது உடைமைகள் கலவரக்காரர்களால் தீக்கிரையாக்கப்பட்டதுடன் பெருமளவில் கொள்ளைகளும் சூறையாடல்களும் இடம்பெற்றன. நான்கு நாட்கள் கடந்த நிலையில் இந்தக் கலவரமும் தீவைப்புகளும் சூறையாடல்களும் லண்டனுக்கு வெளியேயுள்ள நகரங்கள் பலவற்றுக்கும் பரவியது.

இது பிரிட்டிஷ் பொலிஸாரின் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து பல்வேறு கேள்விகளையும் எழுப்பியுள்ளதுடன், பிரிட்டிஷ் நகரங்களைப் பாதுகாக்கும் ஆற்றல் அந் நாட்டுப் பொலிஸாரிடம் இல்லையா என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளது.

இந்த நிலையில் அடுத்த வருடம் கோடைக் காலத்தில் லண்டனில் ஒலிம்பிக் போட்டி நடைபெறவுள்ளது. இதன் பாதுகாப்பு குறித்து தற்போது கேள்வியெழுப்பப்பட்டுள்ளது.

லண்டன் கலவரத்தையடுத்து கடந்த செவ்வாய்க்கிழமை இங்கிலாந்து, நெதர்லாந்து அணிகளுக்கிடையிலான உதைப்பந்தாட்டப் போட்டி இரத்துச் செய்யப்பட்டது. அதேநேரம் லண்டனுக்கு வெளியே பேர்மிங்காமில் இங்கிலாந்து-இந்தியா அணிகளுக்கிடையே டெஸ்ட் கிரிக்கெட் போட்டி தொடர்ந்தும் நடைபெறுகிறது.

இங்கிலாந்துடன் இந்திய அணி டெஸ்ட் போட்டியில் பங்கேற்பதால் பாதுகாப்பு அச்சுறுத்தல் குறித்துப் பெரிதும் அலட்டிக் கொள்ளாது இந்திய அணி தொடர்ந்தும் போட்டியில் பங்கேற்கிறது. இது பிரிட்டிஷ் அரசுக்கு ஓரளவு ஆறுதலாயுள்ளது. இந்திய அணி பாதுகாப்பை காரணம் காட்டி போட்டியை இடை நடுவில் கைவிட்டு வெளியேறியிருந்தால் இங்கிலாந்தில் விளையாட்டுப்போட்டிகளை குறிப்பிட்ட காலத்திற்கு நடத்துவதில் பெரும் பாதுகாப்பு நெருக்கடிகள் எழுந்திருக்கும்.

ஒன்றரை மணி நேர உதைப்பந்தாட்டப் போட்டியை நெதர்லாந்து அணி இரத்துச் செய்கையில் ஐந்து நாள் டெஸ்ட் போட்டியில் இந்தியா பங்கேற்பது பிரிட்டிஷ் அரசுக்குப் பெரும் ஆறுதலாகும்.

இந்த நிலையில் அடுத்த வருடம் நடைபெறும் ஒலிம்பிக்போட்டியில் 10,500 வீரர்களும் 500க்கும் மேற்பட்ட அலுவலர்களும் பங்கேற்கவுள்ளனர். அத்துடன் ஒலிம்பிக் போட்டியானது முழு உலகத்தினதும் கவனத்தையும் சுமார் ஒரு மாதத்திற்கு லண்டனில் குவிக்குமென்பதால் பாதுகாப்பு விடயத்தில் தீவிர கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.



ஏதாவதொரு நாடு பாதுகாப்பு குறைப்பாட்டை சுட்டிக்காட்டி விட்டால் அதனை வேறு நாடுகளும் கவனத்திலெடுத்து விடுமென்பதால் சர்வதேச ஒலிம்பிக் குழு இது குறித்து பிரிட்டிஷ் அரசுடன் தீவிர பேச்சுகளை நடத்திவருகிறது.

குழப்பமற்ற மிகவும் பாதுகாப்பான ஒலிம்பிக் போட்டியை நடத்தி முடிக்க வேண்டுமென்பதில் பிரிட்டிஷ் அரசு தீவிர கவனம் செலுத்தி வருவதாகவும் தேவையான அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்படுமெனவும் பிரிட்டிஷ் உள்துறை அமைச்சர் திரேசா மே தெரிவித்துள்ளார்.

ஒலிம்பிக் பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் விடயங்கள் தொடர்பான முக்கிய மாநாடுகள் லண்டனில் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்திலேயே லண்டனின் கலவரமும் வன்முறைகளும் இடம்பெற்று வருவதால் ஒலிம்பிக் போட்டிக்கான பாதுகாப்பு குறித்து ஆராய விஷேட மாநாடுகள் கூட்டப்பட்டுள்ளன.

ஒலிம்பிக் போட்டியில் பாதுகாப்புக்கே மிகவும் முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளதாகவும் இதற்குப் பிரிட்டிஷ் அரசு நூறு வீத உத்தரவாதம் வழங்க வேண்டுமென சர்வதேச ஒலிம்பிக் குழு (ஐ.ஒ.சி.) தெரிவித்துள்ளது.

லண்டன் கலவரத்தையடுத்து பல்வேறு விளையாட்டுப் போட்டிகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன. இது ஒலிம்பிக் போட்டிகளுக்கான பாதுகாப்பு முன்னேற்பாடுகளை பாதிப்பதாயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு ஒலிம்பிக் போட்டியை எதுவித பாதுகாப்பு அச்சுறுத்தலுமின்றி மிகச் சிறப்பாக நடத்தி முடிப்பதற்கு சிறந்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வது குறித்து தீவிர கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் பிரிட்டிஷ் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# பிரிட்டனை உலுக்கும் கலவரங்கள்

உலக வலம்

ச.துஷ்யந்தினி

அமைதிக்கும் செல்வச் செழிப்புக்கும் பெயர் போன ஐரோப்பிய நகரங்கள் இன்று கலவரங்களாலும் வன்முறைகளாலும் அதிர்ந்து கொண்டிருக்கின்றன.

உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின் பரபரப்பு அடங்குவதற்கு முன்னதாகவே லண்டன் கலவரங்கள் ஊடகங்களின் தலைப்புச்செய்திகளைப் பிடித்துள்ளன.

இளவயதுக் கும்பல்களின் கரங்களுக்குள் சிக்கி பிரிட்டனின் முக்கிய நகரங்கள்



சின்னாபின்னப் பட்டுக் கொண்டிருக்கும் நிலையில் நிலைமையைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு அரச அதிகாரிகளும் பொலிஸாரும் போராடி வருகின்றனர்.

இக் கலவரங்களுக்குப் பல காரணங்கள் கூறப்பட்டாலும் இதற்கான மையப்புள்ளியாகக் கருதப்படுவது கறுப்பினத் தந்தையொருவரின் மரணமே.

சர்ச்சைக்குரிய சூழ்நிலையொன்றில் கடந்த 4 ஆம் திகதி ரொட்டிங்ஹாமில் நான்கு பிள்ளைகளின் தந்தையான மார்க் டக்கன் (வயது29) என்பவர் துப்பாக்கிச் சூட்டில் பலியானார்.

கறுப்பினக் குற்றங்களை ஆராயும் விசாரணைக் குழுவொன்றைச்சேர்ந்த பொலிஸ் பிரிவொன்று டக்கன் பயணித்த காரை நிறுத்திய போது எழுந்த சச்சரவொன்றிலேயே டக்கன் கொல்லப்பட்டார்.

டக்கன் பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்ள ஆரம்பித்ததைத் தொடர்ந்தே பதிலுக்குப் பொலிஸார் துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்ற போதிலும் இது குறித்த விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

டக்கனின் மரணத்திற்கு நீதிகோரி கடந்த சனிக்கிழமை ரொட்டிங்ஹாமில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது எழுந்த கலவரங்களே இன்று நாடுபூராகவும் பரவியுள்ளன.

டக்கனின் மரணம் 1980களின் போதான கறுப்பினத்தவர்களின் மனோநிலையை மீண்டும் நினைவுக்குக் கொண்டு வந்துள்ளது.

1980களில் தாம் பாரபட்சமாக நடத்தப்படுவதாகக் கருதிவந்த கறுப்பினத்தவர்களின் வெறுப்புணர்வு 1985இல் லண்டனில் பெரும் கலவரமாக வெடித்தது.

இதன் பின்னரான மோசமான கலவரமாக தற்போது இடம்பெற்று வருபவையே கருதப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை மேற்கு லண்டனில் ஆர்ப்பாட்டங்களுடன் ஆரம்பமான கலவரங்கள் இன்று நாட்டின் முக்கிய நகரங்கள் அனைத்துக்கும் பரவியுள்ளன.

இந்தக் குழப்பகரமான நிலைமைக்கு வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறையைக் குறைப்பதற்காக 2015 ஆம் ஆண்டுக்குப் பின் 130 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பொதுச் செலவீனத்தைக் குறைப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளமையும் ஒரு காரணமாகக் கூறப்படுகிறது.

**இளைஞர் குழுக்களின் கரங்களில் சின்னாபின்னமாம் முக்கிய நகரங்கள்**

இதேவேளை இந்நிலைமையை ஒரு வாய்ப்பாகக் கருதும் சில இளைஞர் குழுக்கள் வேடிக்கை உணர்வுடன் நாசகாரச் செயல்களில் ஈடுபட்டு வருவதும் கலவரங்களைத் தீவிரப்படுத்தியுள்ளது.

லண்டனில் ஆரம்பித்த கலவரங்கள் தற்போது பேர்மிங்ஹாம், மான்செஸ்டர், நொட்டிங்ஹாம், லிவர்ப்பூல், வொல்ஹெம்மின், வெஸ்ட்புரொம்விச், லெய்செஸ்ரர் போன்ற முக்கிய பெரிய நகரங்களுக்கும் பரவியுள்ளன.

முகமூடிகளை அணிந்த இளைஞர் கும்பல்கள் வர்த்தக நிலையங்களை அழித்து அவற்றை சூறையாடி வருவதுடன் முக்கிய கட்டிடங்கள் மற்றும் வாகனங்களுக்கு தீவைத்தும் பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியும் வருகின்றன.

சூப்பர் மார்க்கெட்டுகள், நகைக் கடைகள் மற்றும் இலத்திரனியல் பொருட்களின் விற்பனை நிலையங்கள் என்பவற்றை இலக்கு வைத்தே அதிகளவான கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

பிரிட்டனில் ஏற்கனவே இளவயதினரின் குற்றச்செயல்கள் அதாவது 10-15 வயதுக்கிடைப்பட்டவர்களின் குற்றச் செயல்கள் அதிகரித்திருப்பதாக செய்திகள் வெளிவந்த நிலையில் இக் கலவரங்களில் ஈடுபடுவோரில் 11, 12 வயது மதிக்கத்தக்கவர்களும் இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்திருப்பது அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

கடந்த சனிக்கிழமையிலிருந்து இவ் ஆக்கம் எழுதப்படும் வரை 1100 இற்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 11 வயதுச் சிறுவன் உள்ளிட்ட 167 பேர் மீது குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

பிரிட்டனின் ஒவ்வொரு பெரிய நகரங்களும் இக் கலவரங்களால் பாதிக்கப்பட்டுள்ள அதேவேளை இயன்றவரை வெளியில் செல்வதைத் தவிர்த்து வீடுகளிலேயே இருக்குமாறு மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் இத்தாலியில் விடுமுறையைக் கழித்துக் கொண்டிருந்த பிரதமர் டேவிட் கமரூன் உடனடியாக நாடு திரும்பி இக் கலவரங்களைக் கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்து ஆராயும் அவசர பாராளுமன்ற விவாதத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

வெளிநாடுகளில் விடுமுறையைக் கழித்துக் கொண்டிருக்கும் எம்.பி.க்கள் பலரும் அவசரமாக நாடு திரும்பி வருகின்ற போதும் நெருக்கடியைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்கு இராணுவத்தை நடவடிக்கையில் ஈடுபடுத்தும் திட்டத்திலிருந்து பிரிட்டிஷ் அரசாங்கம் விலகியே இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.



நெருக்கடியைக் கையாள்வதற்கான அரசின் மந்தகதியிலான நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் வெறுப்புணர்வை அதிகரித்துள்ள நிலையில் கலவரங்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடச் செல்லும் அதிகாரிகள் மக்களின் கடும் விமர்சனங்களை எதிர்கொண்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

லண்டன் வீதிகளில் சுமார் 16 ஆயிரத்திற்கும் அதிகமான பொலிஸ் அதிகாரிகள் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதன் விளைவாக அங்கு சற்று அமைதி திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்குத் தேவையான ஒவ்வொரு நடவடிக்கையையும் அரசாங்கம் எடுக்குமென்பதில் மக்கள் சந்தேகமடையக் கூடாதென பிரதமர் கமரூன் வலியுறுத்தியுள்ளார்.

லண்டனில் வர்த்தக நிலையங்கள், அலுவலகங்கள், சிறுவர் பாடசாலைகள், உணவு மற்றும் மதுபான விடுதிகள் என்பன மூடப்பட்டுள்ளதால் பெரும்பாலான வீதிகள் வெறிச்சோடிக் கிடப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிலைமையை விரைவாகக் கையாளும் அரசாங்கம் காட்டும் அசட்டையீனம் பல்வேறு தரப்பினரையும் கொதிப்படைய வைத்துள்ள நிலையில் இன்னும் சில நாட்களில் இவ் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான உறுதியான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

மோசமடைந்து வரும் இந்நிலைமை கமரூனின் அரசாங்கத்திற்கு பல்வேறு சவால்களை தோற்றுவித்துள்ளது. ஏற்கனவே பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள சமூகத்தில் அதிகரித்து வரும் கலவரங்கள் கமரூன் அரசாங்கத்தின் அரசியல் உறுதிப்பாட்டின் மீதும் பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

இந்நெருக்கடியை அரசாங்கம் எவ்வாறு கையாளப்போகிறது என்பதிலேயே அரசின் ஆட்சிக்காலம் தங்கியுள்ளதால் இன்னும் சில நாட்களில் ஆக்கபூர்வமான தீர்மானங்களை அரசாங்கம் அறிவிக்குமென அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இத் தீர்மானங்கள் தற்போதைய கலவரங்களை முடிவுக்குக் கொண்டு வருவதோடு மட்டுமன்றி எதிர்காலத்தில் இவ்வாறான கலவரமொன்று ஏற்படும் பட்சத்தில் அதனை உடனடியாக முடிவுக்குக்கொண்டு வருவதற்கான வழிவகைகளையும் உள்ளடக்கியிருக்க வேண்டுமென்பதே பிரிட்டிஷ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.




இப்பத்திரிகை ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்டாரால் கொழும்பு 15, எலி ஹவுஸ் ரோட், 68ஆம் இலக்கத்தில் 2011ஆம் ஆண்டு ஜூலை மாதம் 13 ஆம் திகதி சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.